# TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்

# TNEB EMPLOYEES' FEDERATION NEWS

Volume -2 Issue - 9 April 2020 | Monthly Magazine | Bilingual | Price - Rs.10/-
மலர் - 2 இதழ் - 9 ஏப்ரல் 2020 | மாத இதழ் | Tamil & English | விலை ரூ. 10/-

ஆசிரியர் : அ.சேக்கிழார்





தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வெளியீடு





**கொரோனா பாதிப்பால் ஊரடங்கில் பாதிக்கப்பட்டுள்ள
மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு
TNEB எம்ப்ளாயீஸ் நிவாரணம் வழங்கிய காட்சிகள்**



















**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

மலர்-2 ✧ இதழ்-9 ✧ ஏப்ரல் 2020

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜு**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# தனித்திருப்போம்! விழித்திருப்போம்! வீட்டிலிருப்போம்!

**ஊ**ரடங்கில் நாடடங்கி நிற்கிற சூழலில் உலகம் முழுவதும் உயிர்க் கொல்லி நோய் கொரோனாவின் தாக்கம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது.

எப்படி வந்தது? யாரால் வந்தது? என்ன காரணம்? என அங்குலம் அங்குலமாக அனைத்து நாடுகளும் அலசிக் கொண்டிருக்கும் வேளையில் இறந்தவர்களின் எண்ணிக்கையோ அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இந்திய நாட்டில் பாதிப்புகள் கட்டுக்குள் கொண்டுவர மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள், தமிழகத்தில் நோய் தொற்று பராவமல் பாதுகாக்கா எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவும் உலக அளவில் வியக்கக் கூடியதாக உள்ளதற்கு காரணம் பாதிப்புகளும் உயிர்ச்சேதமும் இப்பெரிய நாட்டில் மிகக் குறைவே என்பதுதான்.

தமிழ்நாட்டில் கொரோனா தொற்று பராவமலிருக்க ஆபத்தான பணிகள் மேற்கொண்டு வரும் மருத்துவத் துறை, சுகாதாரத்துறை, காவல்துறை இவர்களோடு நாமும் அளப்பரிய பணியை செய்து வருகிறோம்.

அரசுத் தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளில் மின்சாரப் பணியாளர்களும் ஈடுபடுகிறார்கள் என தெரிவிக்காவிட்டாலும் கார்மேகம் சூழ ஆதவன் மறைந்து நாள் முழுவதும் ஒளி தராவிட்டாலும் வாழ்ந்திட இயலும். ஆனால் கரணம் தப்பினால் மரணம் என்கிற் நிலையில் நின்று விநியோகிக்கும் மின்சாரம் இன்றி ஒரு நொடிப் பொழுதுகூட உலகம் இயங்கியது என்பதை ஆட்சியாளர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என நம்புவோம்.

இருப்பினும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் மின்வாரியத் தலைவர் அவர்களும் ஊடகங்கள் மற்றும் செய்திதாள்களில் மின்சாரம் 24 மணி நேரமும் தடையில்லாது வழங்கிட மின்சார வாரியம் முழுவீச்சில் பணியாற்றுகிறது எனக் குறிப்பிடுவது மட்டுமே மகிழ்ச்சிக்குரிய அம்சமாக கருதுகிறோம்.

கடந்த 5ம் தேதி தேசம் முழுவதும் 9 மணிக்கு 9 நிமிடங்கள் வீட்டில் மின்சார விளக்குகளை அணைத்து ஒளியேற்றிய நிகழ்வில் மின்கட்டமைப்பை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர் களோடு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் உடனிருந்து மகிழ்வளிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. சீரான உற்பத்தி மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், விநியோகித்தல் என்ற பணியை 9 நிமிடங்களுக்கு முன்னும் பின்னும் தமிழகம் முழுதும் செய்திட ஏதுவாக விழிப்பாய் பணியாற்றிய தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் அனைவருக்கும் நன்றிகளை உரித்தாக்குவோம்.

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமலிருக்க சமூக இடைவெளி மேற்கொள்ள ஏதுவாக அலுவலக வருகைக்கு விலக்கு அளிக்கக் கோரியதில் 33% பணியாளர்களை வைத்து பணியாற்ற உத்தரவும், நிலை I மற்றும் IIல் உள்ளவர்கள் 100% வருகை தர வேண்டும் என உத்தரவிட்டதும் வரவேற்கவும், விமர்ச்சிக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

நிலை (1) மற்றும் (2)ல் பொறியாளர்கள் மட்டுமல்ல நிர்வாகப் பிரிவு, செயலகப் பிரிவு, கணக்குப் பிரிவு, கணக்கீட்டுப் பிரிவு, தணிக்கைப் பிரிவு என நிலை (2)ல் பணிபுரிவோர் எண்ணிக்கை அதிகம் என்பதை கணக்கில் கொள்ளவில்லையா என்பதுதான் கேள்வி!

போக்குவரத்து இல்லாத நிலையில் எப்படி வருவர்! வந்தாலும் எங்ஙனம் கடைப்பிடிப்பர் சமூக இடைவெளி!

ஓய்வு பெற உள்ளவர்கள் இம்மாதம் பதவி உயர்வுக்கான தகுதிப் பட்டியலில் இருந்தாலோ அல்லது பதவி உயர்வு கமிட்டி (DPC) பரிசீலிக்க வேண்டி இருந்தாலோ உடன் பதவி உயர்வு வழங்க வேண்டும். குறிப்பாக கணக்கீட்டுப் பிரிவு, நிர்வாகப் பிரிவு, கணக்குப் பிரிவில் ஓய்வு பெறுவோர் உள்ளார்கள் என்பது குறிப்பிடதக்கது என்பதை வாரியம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மின்சார வாரியத்தில் காலங்காலமாய் இருந்து வந்த ஆய்வுக்குழு (Inspection Team) செயலகப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவில் இயங்கி வந்ததை நிறுத்தி மாற்றுப் பணி தந்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை தலைமைப் பொறியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

கரத்தில் காயம்பட்டால் சிரமதைக் கொய்திடும் காட்சியாக அல்லவா உத்தரவுகள் இருக்கின்றன. வாரியம் உரிய கவனம் செலுத்தி மறு உத்தரவிட்டு தொடர்ந்து ஆய்வுக் குழு நிர்வாகப் பிரிவிலும், செயலகப் பிரிவிலும் இயங்கிட வைத்திடல் வேண்டும்.

காலியாக உள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டிருக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கு ஒரே மாதிரியாக எல்லா இடங்களிலும் சம்பளம் வழங்கிடத்தான் உத்தரவு பிறப்பித்துள்ளோம் என வாரியத் தரப்பில் தெரிவித்தாலும், நமது ஆட்சேபணையை ஏற்று மறு உத்தரவு விரிவாக அளித்திடுவார்கள் என நம்புவோம்.

மின்சாரத் தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் அனைவரும் ஒரு நாள் ஊதியம் வழங்கிட ஒப்புதல் தந்து முதலமைச்சர் நிவாரண நிதிக்கு உதவுவதில் மகிழ்விடைகிறோம். அதே வேளையில் அமைப்பு சாராத தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு அரசு உதவிகள் வழங்குகிறது.

ஆனால் மின்சார வாரியத்தில் பணியாற்றி வரும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு எந்த நிதியோ, உதவியோ மின்சார வாரியம் செய்திட முன்வரவில்லை. நம்மால் இயன்ற உதவிகளை பல பகுதிகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு செய்து வருகிறோம். இப்பணியில் ஈடுபட்டுள்ள நம் நிர்வாகிகளுக்கு நன்றி கூறுவோம்!

மின்சார வாரியத்தின் கடைக்கண் பார்வை கடைக்கோடியிலுள்ள ஒப்பந்தத் தொழிலாளர்கள் மீது படாமல் இருந்து விடுமோ என்பதையும் நாம் காத்திருந்து பார்ப்போம்.

கொரோனா நோய் தொற்று பரவாமலிருக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து வீட்டிலிருப்போம்!

***– ஆசிரியர்***

**ஓய்வு பெற்றவர்களை காலிப் பணியிடங்களில் பணியமர்த்துவதில்
ஒரே மாதிரியான ஊதியம் வழங்கிட வழிகாட்டும் உத்தரவு**

## TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION

**(ABSTRACT)**

Establishment - TANGEDCO - Utilization of services of retired employees in certain offices on daily wage basis - Utilization and fixing of uniform rates - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

(Per.) CMD TANGEDCO Proceedings No. 61 Dated 13th April 2020
Panguni - 31
Thiruvalluvar Aandu 2051

**PROCEEDINGS :**

Due to non-recruitment of certain categories and non-filling up of vacancies on retirement in certain categories in various offices, the retired wililng employees were utilized on daily wage basis on the needy areas on various rates.

2. Now, it has been decided to fix a uniform rates for each cadre towards utilizing retired persons on daily wage basis and also, the Chief Engineers concerned are entrusted to issue orders towards utilization of services of retired employees in their offices based on the vacancies in the sanctioned strength, except the appointment of Officer on Special Duty / Consultant / Special Officer are dealt with Secretariat Branch, as in existence. The Chairman-cum-Managing Director / TANGEDCO has approved the above proposal.

3. Accordingly, it is hereby ordered that :-

i) the uniform rates shall be fixed for utilization of services of certain retired employees as in the Annexure to the proceedings.

ii) the Chief Engineers / Chief Financial Controllers / Chief Internal Audit Officer / Deputy Secretary / Personnel concerned shall be directed to issue orders for utilization of services of retired employees in their offices based on the vacancies on the sanctioned strength on daily wage basis and they shall furnish a monthly report to the Secretary / TANGEDCO on or before 20th of every month.

4. The receipt of this proceedings shall be acknowledged.

(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)

**Dr. S. VINEETH**
SECRETARY (a/c)

## ANNEXURE

| Sl. No. | Category | Level of Pay (Rs.) | Existing Daily Wages | Proposed Daily Wages |
|---|---|---|---|---|
| | **OFFICERS** | | | |
| 1. | Assistant Audit Officer, Assistant Engineer and Private Secretary and its equivalent cadre | 39,800 - 1,26,500 | Rs. 600/- Rs. 750/- and Rs. 500/- per working day | Rs. 600/- |
| 2. | Assistant Accounts Officer, Chief Head Draughtsman and its equivalent cadre | 56,300 - 1,78,000 | Rs. 500/- per working day | Rs. 500/- |
| 3. | Assistant Executive Engineer and its equivalent cadre | 58,200- 1,84,300 | Rs. 1,000/- per working day | Rs. 1,000/- |
| 4. | Internal Audit Officer and ites equivalent cadre | 58,500- 1,85,800 | Rs. 600/- per working day | Rs. 600/- |
| 5. | Deputy Chief Internal Audit Officer, Deputy Financial Controler Executive Engineer and its equivalent cadre | 60,600 - 1,91,800 | Rs. 1,000/- per working day | Rs. 1,000/- |
| | **WORKMEN** | | | |
| 6. | Mazdoor | 16,200-51,500 | - | - |
| 7. | Duffadar, Male Nursing Assistant, Office helper, & Watchman and its equivalent cadre | 18,800 - 59,900 | Rs. 300/- per working day | Rs. 300/- |
| 8. | Instrument Mechanic Grade-III Junior Assistant Record Clerk Warden & Wireman | 19,500 - 62,000 | Rs. 300/- per working day | Rs. 300/- |
| 9. | Record Assistant and its equivalent cadre | 20,300 - 64,100 | Rs. 300/- per working day | Rs. 300/- |
| 10. | Assistant Section Officer & Assistant and its equivalent cadre | 21,100-67,100 | Rs. 400/- per working day | Rs. 400/- |
| 11. | Heavy Vehicle Driver (Workshop), Pharmacist | 21,300-67,800 | - | - |
| 12. | Accounts Supervisor, Administrative Supervisor and its equivalent cadre | 36,400 - 1,15,700 | Rs. 300/- per working day | Rs. 300/- |
| 13. | Head Draughtsman, and its equivalent cadre | 36,700 - 1,16,200 | Rs. 300/- per working day | Rs. 300/- |
| 14. | Assistant Press Superintendent, Carrier Special Grade Foreman, Special Grade Foreman, Special Grade Foreman Driver | 39,800 - 1,26,500 | - | Rs. 400/- |

- TRUE COPY -

**SECTION OFFICER**

## பத்திரிக்கை செய்தி /PRESS RELEASE

# "KIND ATTENTION OF TANGEDCO's LOW TENSION CONSUMERS

In view of the COVID-19 outbreak, and lock down since 24.03.2020 midnight, considering the difficulties faced by the LT consumers of TANGEDCO, it was formed that in respect of LT services whose due date for payment of Current Consumption Charges & other arrear payments was between 25.03.2020 to 14.04.2020, the time for such payment was extended up to 14.04.2020. The Government of Tamil Nadu have announced extension of lock down till 30.04.2020. In order to avoid inconvenience that would be faced by the public while arranging for payment after 30.04.2020, TANGEDCO issues the following:

a) Extension of last date for payment of all LT and LTCT consumers whose due dates fall between 25.03.2020 to 30.04.2020 as 06.05.2020 without levy of BPSC and DC-RC fees.

b) To adopt previous month billing (PMC billing) for the LT and LTCT services whose bill month is March 2020/April 2020 and the reading date is from 22.03.2020 to 30.04.2020 (i.e. to adopt the amount billed for January 2020/February 2020/March 2020, as the case may be, as bill amount for March 2020/April 2020).

c) The LT and LTCT consumers of TANGEDCO may be advised to make use of online payment facilities such as Internet banking, Mobile Banking, Payment Gateway, BBPS etc., for the payment of Current Consumption Charges and other charges, as a precautionary measure."

Sd/-xxx(13.04.2020)
CMD/TANGEDCO

**/Forwarded by Order/**

Sd/-xxx(13.04.2020)
Chief financial Controller/Revenue

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **"எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்"**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

✆ : 9841446621 ❖ tnebemployeesfederation3600@gmail.com

**குறிப்பு :** செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.

## அவசியப் பணி மேற்கொள்ளுதல் குறித்து வாரியத்திற்கு கடிதம்

நாள் : 13.04.2020

பெறுநர்:

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள் : கொரோனா - ஊரடங்கு உத்திரவு - மின்சாரம் - பணியாளர்கள்- அவசியப்பணி மேற்கொள்ளுதல் - விபத்து மற்றும் இதர விஷயங்கள் - குறித்து**

வணக்கம். ஊரடங்கு நேரத்தில் 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் வழங்கும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாவதும், உயிர்பலியாவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கொரோனா நோய் தொற்று பரவலைத் தடுக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கும், கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும், மருத்துவமனைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள தேவையான மின்சாரம் , மாநகராட்சி நகராட்சி காவல்துறை அலுவலகங்கள் ஊடகங்கள் செயல்பட மக்கள் வீடடங்கி இருக்க தேவையான மின்சாரம் என அனைவருக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கும் பணியில் மின்சாரத் தொழிலாளர்களும் பொறியாளர்களும் 24 மணி நேரமும் பணியாற்றி வருகிறார்கள்.

08.04.20 அன்று திருச்சி மணப்பாறை அடுத்த புத்தநத்தம் துணை மின்நிலையத்தில் முருகேசன் என்ற மின்பாதை ஆய்வாளர் மின்மாற்றியில் உள்ள பாகம் வெடித்து உடல் முழுதும் தீக்காயமாகி திருச்சி தனியார் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சிகிச்சையில் உள்ளார்.

10.04.20 அன்று தஞ்சாவூர் பட்டுக்கோட்டை அருகே மின்மாற்றியில் ஏறி பணி செய்த பூமிநாதன் என்ற களஉதவியாளர் மின்விபத்துக்குள்ளாகி திருச்சியில் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

11.04.20 அன்று காஞ்சிபுரம் அடுத்த மாகறல் என்ற இடத்தில் நடந்திருக்க கூடிய விபத்து. விவசாய மின்இணைப்பிற்கான இணைப்பில் எஸ். மோகன் என்ற கம்பியாளர் வேலை செய்த போதுமின்சாரம் தாக்கி உயிழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆபத்து காலம் மட்டுமல்ல அன்றாடம் ஆபத்தான பணிகளை மேற்கொள்ளும் துறையில் கடந்த 18 நாட்களாக தொழிலாளர்கள் அல்லல்பட்டு பணியாற்றுகிறார்கள்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் பெய்த திடீர் மழையின் காரணமாக தமிழகம் முழுவதும் பாதிப்படைந்த மின்சாரத்தை எடுத்து செல்லும் உயரமுத்த கம்பிகளின் பாதைகளிலும் மின் விநியோப் பாதைகளில் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்யும் பணிகள் இரவு பகலாக மேற்கொண்டுள்ளார்கள்.

பாரதத்தில் மேலும் ஊரடங்கு நீடிப்பு அறிவிப்பு வர உள்ளதாக தகவல்கள் வெளியாகும் இந்நிலையில் நோய்தொற்று தீவிரத்தன்மையிலிருந்து உயிரைப்பாதுகாக்க வேண்டுமெனில்

மக்களைப்போலவே மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களும் சமூக இடைவெளி மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

தமிழ்நாடு அரசும் மின்சார வாரியமும் உடன் தலையிட்டு மின்சார வாரியத்தில் அதி முக்கியமான பராமரிப்பு விநியோகம் மற்றும் உற்பத்தி பகுதிகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பொறியாளர்கள் ஆகியோரை தேவையின் அடிப்படையில் குறைந்த அளவு பயன்படுத்திடவும் , மேலும் எழுத்துதுறை பணிகளை மேற்கொள்ளும் நிர்வாக, கணக்கு, செயலக மற்றும் தணிக்கைப் பிரிவு பணியாளர்களை இல்லத்திலிருந்தே பணியாற்றும் அளவிலோ அல்லது பொது விடுமுறையோ அளித்திட வேண்டும்.

தலைமை அலுவலகம் உட்பட நிர்வாக அலுவலகங்கள் மற்றும் களப்பணிகளிலும் பெரும் பான்மையான அளவில் பெண் பணியாளர்கள் அலுவலர்கள் பொறியாளர்கள் பணியாற்றுவதால் பெண்கள் பணிக்கு வருவதிலிருந்து விலக்கு அளித்து நோய்தொற்றிலிருந்து பாதுகாப்பு அளித்திட வேண்டுகிறோம்.

ஊரடங்கு நேரத்தில் இரவு பகலாக பணியாற்றுபவர்களுக்கும் தொடர்ந்து ஊரடங்கு அமலாக்கம் இருக்கும் வரையில் பணியாற்றுபவர்களுக்கும் கூடுதல் ஊதியம் வழங்க வேண்டும்.

தேவையான அவசர அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வோர் தவிர்த்து ஏனையவர்களுக்கு சிறப்பு விடுப்பு வழங்க வேண்டும். இல்லத்திலிருந்து மேற்கொள்ளக் கூடிய பணிகளை இல்லத்திலிருந்து செய்ய அனுமதிக்க வேண்டும்.

மின்சார கணக்கீட்டுப் பணிகளை நிறுத்தி வைத்த உத்தரவை ஊரடங்கு தேதி நீடிக்கும் நாள் வரை நீடித்திட வேண்டும்.

நுகர்வோர்கள் ஏற்கனவே செலுத்தி வருவது போல முந்தைய மாத கட்டணத்தையே செலுத்த அனிமதிக்க வேண்டும்.

அனைத்து அலுவலக வளாகங்களிலும் கிருமி நாசினி தெளித்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழக அரசு உத்தரவுபடி மின்சாரத் தொழிலாளரோ அலுவலரோ பொறியாளரோ கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டால் முழு மருத்துவ செலவையும் மின்சார வாரியம் ஏற்பதுடன் கருணைத் தொகை அரசு அறிவித்த ரூ 2,00,000/- வழங்கிட வேண்டும்.

மின்விபத்தில் பாதிக்கப்பட்டு திருச்சியில் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவோருக்கு சிறந்த சிகிச்சை அளித்து குணமாக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

கொரோனாவுக்கு எதிராக ஊரடங்கு தொடர உள்ளதை கவனத்தில் கொண்டு மேற்கண்டவை களுக்கு அரசும் வாரியமும் உரிய நடவடிக்கை எடுத்து உத்திரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# ஒரு மாத கைக்குழந்தையுடன் பணிக்கு திரும்பிய ஐ.ஏ.எஸ். அதிகாரி



கைக்குழந்தையுடன் பணியில் ஈடுபட்டுள்ள ஸ்ரீஜனா கும்மல்லா

**'கொ**ரோனா' பாதிப்புக்கு, நாடே தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், ஆந்திராவில், பிரசவ விடுமுறையில சென்ற பெண் ஐ.ஏ.எஸ்., அதிகாரி, ஒரு மாத கைக்குழந்தையுடன், நேற்று பணிக்கு திரும்பியது, பல்வேறு தரப்பில் இருந்தும் பாராட்டுகளை குவித்து வருகின்றன.

ஆந்திராவில் முதல்வர் ஜென்மோகன் ரெட்டி தலைமையில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது.

**கவலை**

இங்கு விசாகப்பட்டிணம் பெருநகர மாநகராட்சி கமிஷனராக பதவி வகித்து வருபவர் ஸ்ரீஜனா கும்மல்லா. கடந்த 2013ல் ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெற்ற இவருக்கு, கடந்த ஒரு மாதத்திற்கு முன் குழந்தை பிறந்தது.

அரசு ஊழியர்களுக்கு ஆறு மாதங்கள் சம்பளத்துடன் கூடிய பிரசவ விடுமுறை உண்டு. இந்நிலையில் பிரசவ விடுப்பில் இருந்த ஸ்ரீஜனாவுக்கு, கொரோனா தொற்றால், நாடு முழுவதும் அசாதாரண சூழல் நிலவுவது கவலை அளித்தது.

ஆந்திராவில் 427 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஏழு பேர் பலியாகி உள்ளனர். இந்த நேரத்தில் மாநகராட்சி கமிஷனராக ஸ்ரீஜனா ஆற்ற வேண்டிய மக்கள் பணிகள் அடுத்தடுத்து காத்திருந்ததை உணர்ந்தவர், உடனடியாக பணியில் சேர முடிவெடுத்தார்.

இதையடுத்து பிரசவ விடுமறையை பாதியில் ரத்து செய்து விட்டு, தன் ஒரு மாத கைக்குழுந்தையுடன் நேற்று மீண்டும் பணியில் இணைந்தார். கையில் ஒரு மாதக் குழந்தையுடன் கமிஷனர் ஸ்ரீஜனா, தன் இருக்கையில் அமர்ந்து, பணிகளை நேற்று கவனித்த புகைப்படத்தை, பா.ஜ.வை சேர்ந்த மத்திய ஜலசக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத், தன் சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்து, பாராட்டு தெரிவித்தார்.

**பாராட்டு**

அதில், 'தன் பணியை அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்யும், இந்த பெண் அதிகாரிக்கு என் வாழ்த்துகள். இவரை போன்ற கொரோனா போராளிகள் நம் நாட்டுக்கு கிடைத்தது நம் அதிர்ஷ்டம்' என குறிப்பிட்டு இருந்தார்.

மேலும், பல்வேறு தரப்பில் இருந்தும் அதிகாரி ஸ்ரீஜனாவுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

*நன்றி : **தினமலர்***

## ரெட் அலர்ட் மாவட்டங்களில் மின் கட்டண வசூல் பணம் செலுத்துதல் தொடர்பாக வாரியத்திற்கு நமது பெடரேஷனின் கடிதம்

நாள் : 16.04.2020

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள் : கொரோனா தொற்று - ரெட் அலர்ட் மாவட்டங்களில் மின் கட்டண வசூல் பணம் - செலுத்துதல் தொடர்பாக...**

தமிழக அரசு சென்னை, கோவை, திருப்பூர், ஈரோடு, திருநெல்வேலி, திண்டுக்கல், நாமக்கல், செங்கலட்பட்டு, திருச்சி, தேனி, கரூர், ராணிப்பேட்டை, மதுரை, திருவள்ளூர், நாகை, தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை கொரோனா அதிகம் பாதித்திருக்கும் பகுதியாக அறிவித்திருக்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரிய நுகர்வோர்களிடமிருந்து பணம் வசூல் பணி தொடர்ந்து நடைபெறும் நேரத்தில் மேற்கண்ட மாவட்டங்களில் தேனி மாவட்டத்தில் வங்கிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. வசூல் செய்யும் பணத்தை வங்கியில் செலுத்திட முடியாத நிலை உருவாகியுள்ளது.

மேற்கண்ட வங்கி அறிவிப்பினை தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் விடுத்துள்ளார்கள். இந்த நிலை மற்ற மாவட்டங்களிலும் தொடர்வதற்கான நிலை ஏற்படலாம். இப்படி வங்கிகள் மூடும் நிலை ஏற்பட்டால் வசூல் செய்யும் பணத்தை வாரிய அதிகாரிகள் வசம் ஒப்படைப்பதற்கு உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறோம் அல்லது காவல்துறை உதவியோடு வங்கி செயல்படும் இடங்களில் மின்வாரிய வாகனங்களில் கொண்டு சென்று வங்கியில் செலுத்த உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

மேற்கண்டவைகளை கருத்தில் கொண்டு ரெட் அலர்ட் அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள மின்வட்டங்களுக்கு உரிய உத்தரவு வழங்கிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## தேனி மாவட்ட ஆட்சியர் வங்கிகளுக்கு கொரோனா நேரத்தில் செயல்படுவது குறித்து வெளியிட்ட உத்திரவு

From

**Tmt. M. Pallavi Baidev, I.A.S.,**
District Collector
Theni

To

The Lead Bank Manager,
Canara Bank
Theni

**Roc No : 4758/2020/DM Date . 11.04.2020**

Sir,

***Sub*** : *COVID - 19 - Theni - Certain Restrictions in Containment Zone - Banks not to function - Reg.*

***Ref*** : *Secretary to Government, Health and Family Welfare Department Lr. No. 1714/P1/2020, dated 28.03.2020*

***

The Government of India, in the reference cited, have issued guidelines and directed that adminstrative orders should be issued to close all work places in containment and buffer zones. Therefore it is considered necessary to close the banks located in containment zones in Theni District. Hence I request you to take necessary action to close the banks located in the containment zones with immediate effect. The list of places covered under containment zones is enclosed herewith.

Encl : Containment zones list.

**District Collector**
Theni

### CONTAINMENT ZONE

**THENI :**

1. Theni allinagaram
2. Unjampatti
3. Vadapudupatti
4. Kunnur
5. Aranmanaipudur
6. Boothipuram
7. Palanichettipatty

**PERIYAKULAM :**

1. Tamaraikulam bit - 1
2. Thenkarai Bit - 1
3. Thenkarai Bit - 2
4. Kamatchipuram (Group village)
5. Vadakarai Bit 1
6. Vadakarai Bit 2
7. Keelavadakarai
8. Melmangalam
9. Jeyamangalam
10. Silvarpatti
11. D. Vadipatti
12. Tamaraikulam Bit - 2

**BODINAYAKANUR :**

1. Bodinayakanur
2. Melachockanathapuram
3. B. Meenatchipuram
4. Kodangipatti
5. Silamalai
6. B. Ammapatti

**CUMBUM :**

1. C. Pudhupatty
2. Kamayakoundanpatty
3. Narayanathevanpatty
4. Rayappanpatty
5. Aanaimalaiyanpatty
6. Hanumanthanpatty

**UTHAMAPALAYAM :**

1. Kakkilchikayanpatty
2. Ramasamy Nayakanpatty
3. Chinnaovalapuram
4. Ambasamuthiram
5. U. Ammapatty
6. Ellapatti
7. Markayankottai
8. Kobai
10. Kokilapuram
11. Aanaimalaiyanpatty
12. Pulikuththi
13. C. Puthupatty
14. Rayappanpatty
15. Erasakkanyakakanur
16. Poolananthapuram

**CHINNAMANUR**

1. Muthulapuram
2. Chinnaovalapuram
3. Kanniservaipatti
4. Appipatty
5. Erasakkanayakkanur
6. Markayankottai
7. Poolananthapuram
8. Seelayampatty
9. Kuchannur
10. Oodaipatty
11. Aanamalayanpatty
12. Ayyampatti

---

**கொரோனா நோய் தொற்று :**

**மின்சார வாரிய தொழிற்சங்கம் கோரிக்கை**

# பணியாளர்களின் சிகிச்சை செலவை அரசு ஏற்க வேண்டும்

**தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் அ. சேக்கிழார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது : -**

கொரோனா நோய் தொற்று நேரத்திலும் புயலாய் பணியாற்றும் மின்சார வாரிய அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு வருகிறது. இதனால் ஊரடங்கு நேரத்தில் இரவு பகலாக பணியாற்றுபவர்களுக்கு கூடுதல் ஊதியம் வழங்க வேண்டும்.

அவசர அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுவோர் தவிர்த்து மீதம் உள்ளவர்களுக்கு சிறப்பு விடுப்பு வழங்க வேண்டும். வீடுகளில் இருந்து செய்யப்படும் பணிகளை வீட்டில் இருந்தே செய்ய அனுமதிக்க வேண்டும். பெண்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். நுகர்வோர்கள் தற்போது செலுத்தி வருவது போல முந்தைய மாத கட்டணத்தை செலுத்தவும் அனுமதிக்க வேண்டும். அனைத்து அலுவலகங்களிலும் கிருமி நாசினி தெளித்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். கொரோனா நோய் தொற்று ஏற்பட்டால் முழு மருத்துவ செலவை அரசு ஏற்படுதுடன், கருணை தொகையாக ரூ. 2 லட்சம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மின் விளக்குகள் அணைப்பால் 2,200 மெகா வாட் சரிவு

நன்றி : தினமலர்

பிரதமரின் வேண்டுகோளை ஏற்று, தமிழகத்தில் உள்ள வீடுகளில் நேற்று இரவு, 9 நிமிடங்கள், மின் விளக்குகள் அணைக்கப்பட்டதால், மின் தேவை 2,200 மெகா வாட் அளவுக்கு குறைந்தது.

கொரோனா வைரஸ் ஒழிப்பில் நாட்டின் ஒற்றுமையை வெளிப்படுத்த, நேற்று இரவு 9.00மணி முதல் 9 நிமிடங்களுக்கு வீடுகளில் மின் விளக்குகளை அணைத்து விட்டு தீபம் ஏற்ற வேண்டும்; மெழுவர்த்தி ஏந்த வேண்டும்; டார்ச் லைட்களை ஒளிர விட வேண்டும் என பொது மக்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஒரே சமயத்தில் நாடு முழுவதும் அனைத்து விடு வீடுகளிலும் மின் விளக்கை நிறுத்தினால், மின் வினியோகத்டீதில் பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து, வீடுகளில் மின் விளக்குகளை நிறுத்தும் சமயத்தில் மின் விசிறி, 'ஏசி' போன்ற மின் சாதனங்களை, வழக்கம் போல பயன்படுத்தும்படி பொதுமக்களை தமிழக மின் வாரியம் அறிவுறுத்தியது. நேற்று இரவு 8.59க்கு தமிழகத்தின் மின் தேவை, 10 ஆயிரத்து 100 மெகா வாட் என்றளவில் இருந்தது; 9.00 மணி முதல் 5 நிமிடங்களுக்கு மாநிலத்தில் உள்ள இரண்டு கோடி வீடுகளில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின் விளக்குகள் அணைக்கப்பட்டன.

அதனால், 9:10க்கு மின் தேவை, 7,900 மெகா வாட்டாக குறைந்தது. சில நிமிடங்களில் மட்டும் மின் தேவை 2,200 மெகா வாட் அளவுக்கு குறைந்தது. இருப்பினும், மின் அழுத்தத்தில் எந்தப் பிரச்னையும் ஏற்படவிலலை. அதே நேரத்தில் நீர், அனல், எரிவாயு மின் உற்பத்தியும், மின் கொள் முதலும் குறைக்கப்பட்டது. மீண்டும் 9:11க்கு மின் தேவை அதிகரிக்க துவங்கியது. இது குறித்து மின்துறை அமைச்சர் தங்கமணி கூறியதாவது :

பிரமதரின் வேண்டுகோளுக்கு இணங்க, தமிழகத்தில் உள்ள வீடுகளில் மின் விளக்குகள் அணைக்கப்பட்டன. மின் வினிநோயகத்தில் பிரச்னை ஏற்படாமல் இருக்க, முன்னெச்சரிக்கை நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. வீடுகளில் மின் விளக்குகளை அணைப்பதால் 1,200 மொகாவாட் மின் தேவை குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதைவிட அதிக அளவாக 2,200 மெகா வாட் மின்சாரம் குறைந்தது. இருப்பினும், மின்னழுத்தத்தில் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை.

மீண்டும் 9.11 மணிக்கு மின் தேவை அதிகரித்தது. அ தற்கேற்ப மின் நிலையங்களில் மின் உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டது. இந்தியாவில், 22 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் குறைந்துள்ளது. தமிழகத்தில் அனைத்து வீடுகளுக்கும் தடையின்றி மின் வினிநேயாகம் செய்யப்படுகிறது; சென்னையில் மட்டும் 350 மெகா வாட் மின்சாரம் குறைந்துள்ளது.

மின் வினியோகத்தில் எந்த பிரச்னையும் ஏற்படாமல் சிறப்பாக பணியாற்றியதற்காக மின் வாரிய ஊழியர்கள், அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# இன்று இரவு 9.00 மணிக்கு விளக்குகளை மட்டும் அணையுங்கள்

**மின்சார வாரியம் வேண்டுகோள்**

**பி**ரதமரின் வேண்டுகோளுக்கிணங்க ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு மின் விளக்குகளை மட்டும் பொதுமக்கள் அணைக்க வேண்டுமென தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கீழ் 3 கோடிக்கும் அதிகமான மின் இணைப்புகள் உள்ளன. தற்போது கரோனா நோய்த் தொற்றைத் தடுக்க ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மக்கள் முழுமையாக வீட்டில் இருக்க வேண்டிய சூழல் உள்ளது. இதனால் மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்கும் வகையில் 80 சதவீத மின்சாரப் பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். பழுது எங்கு ஏற்பட்டாலும் அங்கு பணியாளர்கள் அனுப்பப்பட்டு சீரான மின் விநியோகம் உறுதி செய்யப்பட்டு வருகிறது. மக்கள் அனைவரும் வீடுகளில் இருப்பதால் வீடுகளுக்கான மின் தேவை மட்டும் சற்று அதிகரித்துள்ளது. மற்றபடி, மின் தேவை 4,800 மெகா வாட் அளவுக்குக் குறைந்துள்ளது.

மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது : மின் தேவை குறைந்ததால் மின் உற்பத்தி நிலையங்கள் உற்பத்தியை ஏற்கெனவே குறைத்துள்ளன. இதனால் மின் கடத்தி திறனை விட குறைவான மின்சாரமே எடுத்துச் செல்லப்படுகிறது. ஒரே அடியாக திறன் குறவைாக அல்லது அதிகமாக மின்சாரத்தை மின்கடத்தியின் மூலம் எடுத்துச் சென்றால், பழுது ஏற்பட்டு விநியோகம் தடைபடும். மீண்டும் அதை சரி செய்து மின்சாரம் வழங்கிட கால விரயம் ஏற்படும்.

பிரதமர் சொன்ன நேரத்தில் மொத்த மின் உற்பத்தி நிலையங்கள் இயக்கத்தை நிறுத்தி விடலாம். ஆனால், அதற்கு பிறகு ஒவ்வொரு மின் நிலையமும் உற்பத்தி தொடங்கிட குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகும். அதுவரை இந்தியா இருளில் மூழ்கும். அதனால் அது சாத்தியம் கிடையாது என்றார்.

**மின்விளக்குகளை மட்டும் அணையுங்கள் :**

இந்நிலையில், பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க மின் விளக்குகளை மட்டும் பொதுமக்கள் அணைக்க வேண்டுமென வாரியம் அறிவுறுத்தியுள்ளது. மின் கட்டமைப்பில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வண்ணம் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், தமிழக மின்சார வாரியத்தால் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மற்ற மின் உபகரணங்களை வழக்கம் போல் இயக்கத்தில் வைத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. மேலும், பொதுமக்கள் இது குறித்து அச்சப்படத் தேவையில்லை என்றும் மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

*நன்றி :*
***தினமணி***

# 9 நிமிட மின்விளக்கு நிறுத்தம் எதிர்கொள்ளத் தயாராகும் பகிர்மானக் கழகங்கள்

**ஞா**யிற்றுக்கிழமை அன்று இரவு 9 மணிக்கு நாடு முழுவதும் மின் விளக்கு நிறுத்தத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ள நிலையில், அந்தச் சூழலை எதிர்கொள்வதற்கு மின்பகிர்மானக் கழகங்கள் தயாராகியுள்ளன.

கரோனா நோய்த் தொற்றுக்கு எதிராக மக்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதை வெளிப்படுத்தும் நோக்கில் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி முதல் 9.09 வரை வீட்டிலுள்ள மின் விளக்குகளை அணைத்து விட்டு, அகல் விளக்குகள் அல்லது மெழுகுவர்த்திகளை ஏற்ற வேண்டும் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார்.

அதன் காரணமாக நாடு முழுவதும் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணி முதல் 9 நிமிடங்களுக்கு மின்சாரத்தின் தேவை வெகுவாகக் குறைய வாய்ப்புள்ளது. அதனால் மின் விநியோக சாதனங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாநில மின் பகிர்மானக் கழகங்கள் தயாராகியுள்ளன.

இது தொடர்பாக அதிகாரி ஒருவர் கூறுகையில், ''நாட்டில் மின்சாரத்தின் தேவை கடந்த 2-ம் தேதி நிலவரப்படி 125.81 ஜிகா வாட்டாக இருந்தது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25 சதவிகிதம் குறைவாகும். பிரதமர் மோடி விடுத்த அழைப்பு காரணமாக ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு மின்சாரத்தின் தேவை 10 ஜிகா வாட் முதல் 20 ஜிகா வாட் வரை குறைய வாய்ப்புள்ளது.

திடீரென்று ஏற்படும் மின்சாரத் தேவை குறைவை எதிர்கொள்ளும் நோக்கில், அன்று இரவு 8 மணி முதலே வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் அளவைப் படிப்படியாகக் குறைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அந்த நேரத்தில் பணியாளர்கள் அனைவரையும் பணியில் இருக்கச் செய்யுமாறு மாநில மின் பகிர்மானக் கழகங்கள் வலியுறுத்தியுள்ளன. இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்வது புதிதொன்றுமல்ல. ஆண்டுதோறும் 'புவி நேரம்' அனுசரிக்கப்படும்போது மக்கள் வீடுகளில் உள்ள மின்விளக்குகளை அணைத்துவிடுவர். அந்த சமயங்களிலும் இதே போன்ற சூழலை எதிர்கொண்டுள்ளோம்'' என்றார்.

**பாதிப்பு ஏற்படும் :** நாடு முழுவதும் 9 நிமிடங்களுக்கு மின் விளக்குகள் அணைக்கப்பட்டால், மின் விநியோக சாதனங்கள் பாதிக்கப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சசி தரூர், ஜெய்ராம் ரமேஷ் உள்ளிட்டோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சசி தரூர் வெளியிட்ட கட்டுரைப் பதிவில், மின் விளக்குகளை அணைப்பது தொடர்பாக பிரதமர் மோடி தீர ஆலோசித்து அறிவித்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மகாராஷ்டிர மின்துறை அமைச்சர் நிதின் ரௌத் வெளியிட்ட அறிக்கையில், ''நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதால், மின்சாரத்தின் தேவை ஏற்கெனவே குறைந்துள்ளது. இந்தச் சூழலில் 9 நிமிடங்களுக்கு நாடு முழுவதும் மின்சாரத்தின் தேவை குறைவது பின்னர் திடீரென அதிகரிப்பது மின் விநியோக சாதனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு தனியார் மருத்துவ மனைகளை சிகிச்சை அளிக்கும் அரசாணை

**ABSTRACT**

COVID-19 - Containment and Management of COVID-19 - Treatment of patients affected by Corona Virus Disease in Private Hospitals - Orders - Issued.

---

**HEALTH AND FAMILY WELFARE (P1) DEPARTMENT**

G.O.(Ms) No. 174

Dated : 03.04.2020
Vihari, Panguni - 21
Thiruvalluvar Aandu - 2051.

**G.O. (Ms) No. 167, Health and Family Welfare Department, dated : 02.04.2020**

****

**ORDER :**

In the G.O. read above, the Government have notified the list of designated Government Hospitals for treatment of COVID-19 patients. Further, treatment for COVID-19 is being offered in all Government Medical College Hospitals, District Head Quarters Hospitals and Key Sub-District Hospitals completely free of cost.

2. Now, it has been brought to the notice of the Government that certain patients / Public desire to have treatment for COVID-19 in Private Hospitals also.

3. Considering the spread of Corona Virus Disease (COVID-19) in the State, the Government have decided to include the Private Hospitals in the State for treatment to COVID-19 patients to prevent the spread of this communicable disease.

4. Accordingly, the willing patients are hereby informed that they may approach the Private Hospital's listed in the Annexure to this order to receive treatment for COVID-19, at their own cost. The hospitals are directed to follow the treatment protocol prescribed by Government of India from time to time.

5. The Private Hospitals are further directed to send a daily report on the treatment given to the patients in their hospitals to the Director of Public Health and Preventive Medicine.

6. The list of hospitals shall be modified from time to time by the Director of Medical and Rural Health Services based on the emergent situation.

(BY ORDER OF THE GOVERNOR)

**BEELA RAJESH**
SECRETARY TO GOVERNMENT

## மாற்றுத் திறனாளிகள் பணிக்கு வருவதிலிருந்து விளக்கு அளித்து உத்திரவு

**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை - கொரோனா வைரஸ் (Covid-19) நோய்த்தொற்றை தடுக்க குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவு விதிக்கப்பட்ட நாட்களில் மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலக பணி மேற்கொள்வதிலிருந்து விலக்கு (Exemption) - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (அநமு) துறை**

அரசாணை (நிலை) எண். 2 — நாள் : 31.03.2020

விகாரி, பங்குனி-18, திருவள்ளுவர் ஆண்டு, 2051

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண். 152, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 23.03.2020.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண். 3/நிர்.2/2020, நாள். 24.03.2020.

★★★★

**ஆணை :**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தவிர்க்க அத்தியாவசிய பணிக்காக மாற்றுத் திறனாளிகள் நலத்துறை உட்பட பல்வேறு துறைகள் பணியாற்றிட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்படும் கடிதத்தில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட துறைகளில் மாற்றுத் திறனாளி பணியாளர்களும் பணிபுரியும் நேர்வில் அவர்களின் உடல்குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு அரசால் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாட்களில் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து தவிர்ப்பு (Exemption) வழங்குமாறு கோரிய மாற்றுத்திறனாளிகள் நல சங்கங்களின் கோரிக்கைகைய ஏற்று மாற்றுத்திறனாளி பணியாளர்கள் **பணியில் இருப்பதாகக் கருதி அனுமதி வழங்கி உரிய** ஆணை வழங்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு துறைகளிலும் உள்ள மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளான 24.03.2020 முதல் 14.04.2020 வரை அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) அரசு ஆணையிடுகிறது.

**க. சண்முகம்**

(ஆளுநரின் ஆணைப்படி) — அரசு தலைமைச் செயலாளர்

## ஊரடங்கு நேரத்தில் பணிக்கு வருவோருக்கு அடையாள சான்றிதழ் வழங்கிட தலைமை பொறியாளர் பணியமைப்பு உத்திரவு

**TANGEDCO**

From
**Er. J. Kalaiselvi,** B.E.,
Chief Engineer / Personnel,
TANGEDCO,
144, Anna Salai, Chennai - 2.

To
All Chief Engineers,
TANGEDCO & TANTRANSCO.

**Lr. No. CE/Per/Sup-cum-steno/D.No.01/20 Dt.03.04.20.**

Sir/Madam,

**Sub** : Issue of Authorisation letter to officials / staffs working in TANGEDCO/TANTRANSCo during the restriction period of COVID 19 for executing the official duties to maintain the Electrical infrastructure - Reg.

**Ref** : Circular Memo No. 15584/A9/A92/2020-2 Dt. 03.04.20.

****

All officers concerned are hereby instructed to issue the Authorisation letter as per the format enclosed herewith for the officials and staff working in TANGEDCO and TANTRANSCO to perform the official duties during this lockout period without any restrictions.

Instructions may be issued to the officials/staff to carry this Authorization Letter along with Employee ID card for production at the Police check post.

**CHIEF ENGINEER / PERSONNEL**

---

## Authorisation Letter

### TO WHOMSOEVER IT MAY CONCERN

This to inform that the below official / staff is working in the office of ............................. His / Her service is essentially required and TNEB being an emergency service, he/she may be exempted from the restrictions imposed during COVID-19 in the State of Tamil Nadu. Hence, he / she may be permitted to be on road during the above restricted period.

Name of the official / staff : Thiru / Tmty. :

Designation :

***Issuing Authority***

**ஊரடங்கு நேரத்தில் பணிக்கு வருவோருக்கு அடையாள சான்றிதழ் வழங்கிட வாரிய பணியமைப்பு உத்திரவு**

## Tamilnadu Generation and Distribution Corporation Ltd.,

**(SECRETARIAT BRANCH)**

**Circular Memo. No. 15584/A9/A92/2020-2, dated 03.04.2020**

**Sub** : COVID 19 - Violation of the lockdown measures on maintaining social distrance - Government servants called for duty - Issue of Authorisation - Instructions - Issued - Communicated.

**Ref** : i) Circular Memo. No. 15584/A9/A92/2020-1, dated 24.03.2020.
ii) G.O. Ms. No. 172, Revenue and Disaster Management Department, dated 25.03.2020
iii) From the Chief Secretary to Government, Revenue and D.M. (DM.II) Department, Secretariate, Chennai Lr. No. 11449/DM.II/2020-1, dated 02.04.2020

****

The Instructions issued in the reference third cited may be communicated to all officers of TANGEDCO, TANTRANSCO, TNEB LTD. for information and taking necessary action.

**(BY ORDER OF THE CHAIRMAN - CUM - MANAGNG DIRECTOR)**

**S. VINEETH**
Secretary (a/c)

---

**Revenue and D.M (DM-II) Department**
Secretariate, Chennai - 600 009.

**Letter No. 11449/DM-II/2020-1, dated 2.4.2020**

From
**Thiru K. Shanmugam,** I.A,S.,
Chief Secretary to Government

To
All Secretaries to Government,
Secretariat, Chennai - 600 039.

Sir,

**Sub** : COVID-19 - Violation of the lockdown measures on maintaining social distance - Government servants called for duty - Issue of Authorisation - Instructions - Issued - Regardng.

**Ref** : GO.Ms.No. 172, Revenue & Disaster Management Dept. dated 25.3.2020.

Kind attention is invited to the Notification issued in the reference cited, wherein certain departments like Police, Electricity, Municipal Bodies, Hospitals, Social Welfare Department, etc., are exempted from the restrictions imposed during lockout for a period of 21 days with effect from 25.3.2020.

2. In this connection, I am to request you to issue necessary authorisation for skeletion staff being utilised by the Secretaries of the Department and their Head of the Departments for COVID-19 related duties during the above period by making a duty roaster. The Government officials and staff members should carry it along with their identity card for production at the Police Check posts and office entrance. This will avoid unnecessary movement on roads by employees not on duty during the lockout period. The matter may also be informed to the Head of the Department under your control.

Yours faithfully,
for **Chief Secretary to Government**

## ஊரடங்கு நேரத்தில் பணிக்கு வருவோருக்கு அடையாள சான்றிதழ் வழங்கிட அரசாணை

**ABSTRACT**

Corona Virus (COVID-19) pandemic - Willingness to contribute one day's salary to the Chief Minister's Public Relief Fund by the Service Associations of Government Officials. Employees and Teachers to support the relief and preventive measures being taken by the Government - Accepted - Orders Issued.

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (K) DEPARTMENT**

G.O. (Ms) No. 41

Dated : 03.04.2020
விகாரி, பங்குனி - 21
திருவள்ளுவர் ஆண்டு 2051

**ORDER :**

The Government is taking effective measures to control the spread of novel Corona virus andemic. The Hon'ble Chief Minister has made an appeal to the public, to contribute generously to the Chief Minister's Public Relief Fund towards the measures, being taken by the Government to control the Corona virus disease.

2. The Serivce Associations of Government Officials, Employees and Teachers have expressed their willingness to contribute one day's salary to the Chief Minister's Public Relief Fund to support the relief and preventive measures being taken by the Government to control the spread of Corona virus pandemic.

3. The Government have decided to accept the wilingness of the Service Associations of Government Officials. Employees and Teachers and direct that the voluntary contributions of one day's salary / more than one day's salary of the Government Officials. Employees and Teachers to the "Chief Minister's Public Relief Fund" towards the relief and preventive measures being taken by the Government to control the spread of Corona virus pandemic, be deducted from their pay bill for the month of April / May 2020.

4. The following procedures be followed to facilitate the contributions made by the Government Officials, Employees and Teachers :-

i) Any Official / Employee / Teacher willing to voluntarily contribute one day's salary or more than one day's salary to the "Chief Minister's Public Relie Fund", shall give his / her consent in writing to the concerned Drawing and Disbursing Officer.

ii) The Drawing and Disbursing Officers shall make use of the IFHRMS application for calculating one day's / more than one day's salary in the pay bill for the month of April / May 2020. This amount shall be deducted on the basis of gross amount of salary for the month of April / May 2020 and credited directly to the **"Chief Minister's Public Relief Fund"** Savings Bank Account maintained at Indian Overseas Bank, Secretariat Branch, Chennai - 9 (SB A/c No. 117201000000070, IFS Code : IOBA0001172, CMPRF : PAN No. AAAGC0038F) on the due date of disbursement of salary. The Drawing and Disbursing Officers shall inform the District level Officers and Heads of Departments on the Electronic Clearing System (ECS) mode of deduction from the monthly pay bill and the amount credited to the Chief Minister's Public Relief Fund account along with list of employees from whose salaries, the contributions are deducted.

iii) If any of the offices do not have Electronic Clearing System (ECS) mode of payment for salary of the staff members, the Pay Drawing and disbursing Officers shall obtain a consolidated crossed Cheque or Demand Draft in favour of the "Chief Minister's Public Relief Fund". The Cheque / Demand Draft along with the statement of Names, Designation and the name of the office of the contributing employees shall e sent to the District level Nodal Officer of that Department nominated by the concerned Heads of Department. The Nodal Officer, in turn, will send the Cheques / Demand Drafts, so received along with the statement of particulars to the Deputy Secretary to Government and Treasurer, Chief Minister's Public Relief Fund. Finance Department, Secretariat, Chennai - 9, under intimation to the concerned Heads of Department. The Heads of Department will monitor the collection and forwarding of contributions along with the statements to the Chief Minister's Public Relief Fund. Heads of Department shall nominate an officer of his Department in each District as Nodal Officer.

iv) In respect of Offices of Heads of Department and the departments of Secretariat, the same procedure shall be followed and the Drawing and Disbursing Officer shall send the details of Electronic Clearing System (ECS) / Cheque / Demand Draft and statement of particulars direct to the Chief Minister's Public Relief Fund.

v) In respect of Self-drawing Officers, the same procedure outlined above shall be followed.

vi) The Drawing and Disbursing Officers shall allow tax exemption to the extent of 100% (under section 80(G) of Income Tax Act) on the contribution to the Chief Minister's Public Relief Fund. Employees who have contributed to the Chief Minister's Public Relief Fund other than salary deduction may get receipt for such contribution from Chief Minister's Public Relief Fund, to avail tax exemption.

vii) Any employee willing to contribute more than one day's salary may also be permitted to do so, following the procedure under item (i) above.

viii) These orders may be applied mutatis mutandis to all employees of Local Bodies, Universities, Board and Corporations, Aided Educational Institutions and other Institutions receiving grants from the Government and also to the employees drawing Consolidated Pay, based on the willingness obtained from the employees.

5. The Drawing and Disbursing Officers shall ensure that the contributions are made purely voluntarily and the above procedures have been evolved only in order to facilitate the request made by the Service Associations of Government Officials. Employees and Teachers for contribution to the Chief Minister's Public Relilef Fund.

6. This order issues with the concurrence of the Finance Department vide its U.O.No. 14922/CMPRF/2020-1, dated 01.04.2020.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM**
Chief Secretary to Government

## 11 உதவி பொறியாளர் பதவிகளை உதவி செயற் பொறியாளர்களாக தரம் உயர்த்திய உத்திரவு

## Tamilnadu Generation and Distribution Corporation Limited

**(ABSTRACT)**

Establishment - TANGEDCO - Upgradation of two posts each in Chennai Region / South and Chennai Region / North and each one post in other seven Regions of Assistant Engineer/Project BEST as Assistant Executive Engineer / Project BEST and the existing posts of Assistant Engineer/GIS in Regional / Distribution Circles, Headquarters as Assistant Executive Engineer/GIS - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per.) CMD TANGEDCO Proceeding No. 55** Dated 23rd March 2020.
Panguni-10
Thiruvalluvar Aandu 2051.

**Read :-**

i) (Per) B.P. (Ch) No. 25 (SB), dated 24.01.2001
ii) (Per) B.P. (Ch) No. 24 (Adm. Br.) dated 28.10.2006
iii) (Per) B.P. (Ch) No. 22 (Adm. Br.) dated 11.01.2007.

iv) Memo. (Per) No. 074822/326/G.38/G.382/2008-12, dated 09.10.2013
v) (Per) CMD TANGEDCO Proceedings No. 38 (Adm. Br.) dated 16.02.2018.
vi) (Per) CMD TANGEDCO Proceeding No. 156 (SB), dated 26.08.2019.

***

**PROCEEDINGS :**

The TANGEDCO has created 11 nos. of Assistant Engineers/Junior Engineer-I Grade posts vide B.P. second cited (i.e.) two post each for in Chennai Region / North and South and seven nos. posts for Regional Offices for implementation of computerized LT Billing System under Project BEST Likewise Geographical Information Sytem (GIS) technology has been utilized in TANGEDCo for mapping of all the asset and consumer information in digital platform with an in house team of Assistant Engineer/Asistant Executive Eningeer/GIS Officers at EDC, Distribution Regions and GIS Division at Headquarters. The said officials were trained through various programmes conducted by the GISs.

2. Considering the nature of work and the request of Chief Engineers sanction is hreby accorded for upgradation of Assistant Engineer / Project BEST posts in the Level of pay of Rs. 39,800 - 1,26,500/- in all Regional Offices (i.e. two posts each in Chennai Region / South and Chennai Region/North and each one post in other seven regions) as Assistant Executive Engineer / Project BEST in the Level of Pay of Rs. 58,200-1,84,300/- on their promotion so as to utilize their services beneficially to the Board.

3. Sanction is also hereby accorded for upgradation of the existing posts of Assistant Engineer/GIS in the Level of Pay of Rs. 39,800-1,26,500/- in Regional/Distribution Circles and Headquarters as Assistant Executive Engineer/GIS in the Level of pay of Rs. 58,200 - 1,84,300/ - The incumbent of the post shall be retained in the same stations on promotion.

4. The upgraded posts mentioned in paras-2 & 3 above shall get downgraded as Assistant Engineer / Junior Engineer-I Grade/Project BEST and Assistant Engineer / Junior Engineer-1 Grade/GIS from the date of which the present incumbents of the posts gets relieved/retired.

5. The incumbents of the posts ordered in paras-2 & 3 above will be eligibel to draw the usual pay, Dearness Allowance, House Rent Allowance, City Compensatory Allowance and other allowances at the rates admissible under the orders in force wherever applicable.

6. The expenditure is debitable to "TANGEDCO Funds - Revenue Expenses - 75 - Employees costs 75.1 - Salaries - 75.110 - Salaries Provincial".

7. The receipt of this proceedings shall be svknoelrfhrf.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**Dr. S. VINEETH**
Secretary (a/c)

## மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவிப்பு



செ.கு.எண். 037 நாள் : 31.03.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி**
**அவர்களின் அறிக்கை - நாள் 31.3.2020**

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட உயர் அதிகாரிகள் கொண்ட பல்வேறு குழுக்களுடன் நேற்றைய தினம் (30.3.2020) கலந்தாய்வு செய்த பின்னர், இன்று நான் உயரதிகாரிகளுடன் ஆலோசித்து தமிழ்நாட்டு மக்களின் நன்மை கருதி, கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கின்றேன் :

1. **கூட்டுறவு நிறுவனங்களில் பயிர்க்கடன்** பெற்றவர்கள் தவணைத் தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.
2. **வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களுக்கு** தவணைத் தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.6.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.
3. **தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு** தவணைத் தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.6.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.
4. அனைத்து **மீனவ கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கைத்தறி கூட்டுறவு சங்கங்களிலிருந்து** பெறப்பட்ட கடனுதவிகளுக்கான தவணைத் தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.6.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.
5. **தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில்** (TIIC) கடன் பெற்றுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கடன் தவணைகளைச் செலுத்த மூன்று மாத கால அவகாசம் (30.6.2020 வரை) வழங்கப்படுகிறது.

6 **‘கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்’ என்ற சுமார் 200 கோடி** ரூபாய் மதிப்பிலான சிறப்பு கடனுதவித் திட்டம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் கடனுதவி பெற்றுள்ள 2000 சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் அவசர மூலதனத் தேவை களுக்காக செயல்படுத்தப்படும்.

7. **சிப்காட் நிறுவனத்திடம் மென்கடன் பெற்றுள்ள** தொழில் நிறுவனங்கள் கடன் தவணை செலுத்த மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது.

8. **சிப்காட் தொழில் பூங்காவில்** செயல்பட்டு வரும் தொழில் நிறுவனங்கள் **பராமரிப்புக் கட்டணம்** செலுத்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் (30.6.2020 வரை) வழங்கப்படுகிறது.

9. மோட்டார் வாகன (Motor Vehicles Act) சட்டப்படி உரிமங்கள் மற்றும் வாகன தகுதிச் சான்றுகள் (Licence & FC) புதுப்பிக்கப்பட வேண்டிய கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.6.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

10. எடைகளும், அளவைகளும் சட்டம் (Weights & Measures Act), தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (TN Shops & Establishments Act, உள்ளாட்சி அமைப்புகளினால் அமல்படுத்தப்படும் கேடும் குற்றமும் பயக்கும் தொழிற்சட்டம் (Dangerous & Offence Act) ஆகியவற்றின் கீழ் புதுக்பபிக்கப்பட வேண்டிய உரிமங்களின் கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.6.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

11. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் செலுத்த வேண்டிய **சொத்துவரி, குடிநீர் கட்டணம்** போன்றவை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.6.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

12. தற்போது உள்ள சூழநிலையில், வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாடகை செலுத்துவதில் உள்ள சிரமங்களை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். எனவே, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான வீட்டு வாடகைத் தொகையை இரண்டு மாதங்கள் கழித்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வீட்டு உரிமையாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு கொரானா வைரஸ் தொற்றினை தடுப்பதற்காக 144 தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. அதே சமயத்தில், இந்நோய்த் தொற்று இரண்டாம் கட்டத்தில் இருப்பதாகவும், அது **மூன்றாம் கட்டத்திற்குப் பரவாமல் இருக்க பொதுமக்கள்** அனைவரும் ஒத்துழைப்பு தந்து, தங்கள் வீட்டிலேயே இருப்பது மிகவு் அவசியம் என்று நிபுணர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். எனவே, **அத்தியாவசிய பொருட்களை வாங்க அரசு பிறப்பித்துள்ள நேரக் கட்டுப்பாடுகளை பொதுமக்கள் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.** மேலும், எந்தவிதமான வதந்திகளை நீங்கள் நம்ப வேண்டாம். வதந்திகள் பரப்புவோர் மீது தமிழ்நாடு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே உங்களின் நன்மைக்காவகவும், உங்கள் குடும்பத்தின் நன்மைக்காகவும், நம் நாட்டின் நன்மைக்காகவும், பொதுமக்கள் அனைவரும் அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**‘‘விழித்திருப்போம்; விலகியிருப்போம்;**
**வீட்டிலேயே இருப்போம்; கொரோனாவை வெல்வோம்’’**

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**செய்தி வெளியீடு**

**எண். 42** **நாள் : 13.04.2020**

## 'தாழ்வழுத்த மின்நுகர்வோர்களின் கவனத்திற்கு'

கோவிட்-19 பரவுதலால் 24.03.2020 நள்ளிரவு முதல் ஊரடங்கு அமல்படுத்தியதன் காரணமாக, தாழ்வழுத்த மின்நுகர்வோர்களின் இடர்பாடுகளை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்களின் மின்னிணைப்புகளுக்கு மின் கட்டணம் மற்றும் இதர நிலுவை தொகை செலுத்துவதற்கான கெடு நாள் 25.03.2020 முதல் 14.04.2020 வரை இருக்குமாயின், அதற்கான தாமதக் கட்டணம் மற்றும் மின் துண்டிப்பு/ மறு இணைப்புக் கட்டணமன்றி 14.04.2020 வரை கட்டணம் செலுத்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டிருந்தது.

தற்பொழுது தமிழ்நாடு அரசு 30.4.2020 வரையிலான காலத்திற்கு ஊரடங்கு உத்தரவினை நீட்டிப்பு செய்ததற்கான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 30.04.2020க்கு பிறகு மின்கட்டணம் செலுத்த வரும் தாழ்வழுத்த மின்நுகர்வோர்களின் இடர்பாடுகளை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் அறிவிப்புகள் கீழ்வருமாறு:

அ) தாழ்வழுத்த மின்நுகர்வோர்களின் மின்கட்டணம் மற்றும் இதர நிலுவை தொகை செலுத்துவதற்கான கெடு நாள் 25.03.2020 முதல் 30.04.2020 வரை இருக்குமாயின், அத்தொகையினை செலுத்த 06.05.2020 வரை காலநீட்டிப்பு வழங்கப்படுகிறது.

ஆ) மார்ச் 2020 மற்றும் ஏப்ரல் 2020 ஆகிய மாதங்களில் 22.03.2020 முதல் 30.04.2020 வரை மின்கட்டணம் செலுத்த வேண்டிய தாழ்வழுத்த மின்நுகர்வோர்கள் அதற்கு முந்தைய மாத கணக்கீட்டு பட்டியல்படி மின்கட்டணம் செலுத்தலாம். இவ்வாறு செலுத்திய மின்கட்டணம் பின்வரும் மாத கணக்கீட்டு மின்கட்டணத்தில் சரிகட்டல் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (அதாவது ஜனவரி 2020/பிப்ரவரி 2020/ மார்ச் 2020 ஆகிய மாதங்களில் செலுத்திய தொகையையே மார்ச் 2020/ஏப்ரல் 2020 மின்கட்டணமாக செலுத்தலாம்.)

இ) மேலும், ஏற்கனவே பயனீட்டாளர்களுக்கு வழங்கியுள்ள இணையதளவழி மூலம் வலைதள வங்கியியல், கைபேசி வங்கியில், பேமண்ட் கேட்வே, பிபிபிஎஸ் (BBPS) முதலிய வழிகள் மூலம் பணம் செலுத்தி மின்கட்டண கவுண்டர்களுக்கு வருவதை தவிர்த்து முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு தாழ்வழுத்த மின்பயனீட்டாளர்களை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கேட்டுக் கொள்கிறது''

**தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / வருவாய்**

**கொரோனா வைரஸ் தொற்று நோய் உள்ளதால் ஊரடங்கு காலத்தில்**
**முந்தய மாத மின்கட்டணத்தையே செலுத்திட உத்திரவு**

# TANGEDCO

## ACCOUNTS BRANCH

**Memo No. CPC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.235/2020, dated 13.04.2020**

**Sub** : TANGEDCO - COVID - 19 outbreak - LT due dates between 25.03.2020 to 30.04.2020 - Extension of time (EOT) for such LT Services upto 06.05.2020 - as a precautionary measure - PMC Billing upto 30.04.2020 - Instruction issued - Reg.

**Ref** :
1. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/201/2020 dated 21.03.2020
2. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.218/2020 dated 23.03.2020
3. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D219/2020 dated 26.03.2020
4. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.225/2020 dated 27.03.2020
5. CMD's note approval dated 13.04.2020

***

In view of the COVID-19 outbreak, and lock down since 24.03.2020 midnight, considering the difficulties faced by the LT consumers of TANGEDCO, it was informed that in respect of LT services whose last date for payment of Current Consumption Charges & other arrear payments was between 25.03.2020 to 14.04.2020, the time for such payment was extended upto 14.04.2020. The Government of Tamil Nadu have announced extension of lock down till 30.04.2020. In order to avoid inconvenience that would be faced by the public while arranging for payment after 30.04.2020, TANGEDCO issues the following instructions:

a) Extension of last date for payment of all LT and LTCT consumers whose due dates fall between 25.03.2020 to 30.04.2020 as 06.05.2020 without levy of BPSC and DC-RC fees.

b) To adopt previous month billing (PMC billing) for the LT and LTCT services whose bill month is March 2020/April 2020 and the reading date is from 22.03.2020 to 30.04.2020 (i.e. to adopt the amount billed for January 2020/February 2020/March 2020, as the case may be, as bill amount for March 2020/April 2020).

c) The LT and LTCT consumers of TANGEDCO may be advised to make use of online payment facilities such as Internet banking, Mobile Banking, Payment Gateway, BBPS etc., for the payment of Current Consumption Charges and other charges, as a precautionary measure.

2.0) The Superintending Engineer / EDCs are instructed to communicate the above to all the officials convened for necessary action.

**// By Order of CMD/TANGEDCO//**

Sd/-xxx (13.04.2020)
Chief Financial Controller/Revenue

## பத்திரிக்கை செய்தி

# கொரோனா நோய்த்தொற்று நேரத்திலும் புயலாய் பணியாற்றும் மின் தொழிலாளர்களுக்கு தொடரும் விபத்துகளும் பலியும்

# தமிழக அரசுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வேண்டுகோள்!

**செவி சாய்க்குமா அரசும் மின்வாரியமும்**

கொரோனா நோய் தொற்று பரவலைத் தடுக்க எடுக்க நடவடிக்கைகளுக்கும் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும் மேற்கொள்ளும் மருத்துவமனை களுக்கு சிகிச்சை மேற்கொள்ள தேவையான மின்சாரம் மாநகராட்சி நகராட்சி காவல்துறை அலுவலகங்கள் ஊடகங்கள் செயல்பட மக்கள் வீடடங்கி இருக்க தேவையான மின்சாரம் என அனைவருக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கும் பணியில் மின்சாரத் தொழிலாளர்களும் பொறியாளர்களும் 24 மணி நேரமும் பணியாற்றி வரும் நேரத்தில் தொடர் விபத்துகளும் உயிர்ப்பலியும் ஏற்பட்டு வருகிறது

08.04.20 அன்று திருச்சி மணப்பாறை அடுத்த புத்தநத்தம் துணை மின்நிலையத்தில் முருகேசன் என்ற மின்பாதை ஆய்வாளர் மின்மாற்றியில் உள்ள பாகம் வெடித்து உடல் முழுதும் தீக்காயமாகி திருச்சி தனியார் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சிகிச்சையில் உள்ளார்.

10.04.20 அன்று தஞ்சாவூர் பட்டுக்கோட்டை அருகே மின்மாற்றியில் ஏறி பணி செய்த பூமிநாதன் என்ற களஉதவியாளர் மின்விபத்துக்குள்ளாகி திருச்சியில் தனியார் மருத்துவ மனையில் சிகிகச்சை பெற்று வருகிறார்.

11.04.20 அன்று காஞ்சிபுரம் அடுத்த மாகறல் என்ற இடத்தில் நடந்திருக்க கூடிய விபத்து விவசாய மின்இணைப்பிற்கான இணைப்பில் எஸ் . மோகன் என்ற கம்பியாளர் வேலை செய்த போதுமின்சாரம் தாக்கி உயிழப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆபத்து காலம் மட்டுமல்ல அன்றாடம் ஆபத்தான பணிகளை மேற்கொள்ளும் துறையில் கடந்த 18 நாட்களாக தொழிலாளர்கள் அல்லல்பட்டு பணியாற்றுகிறார்கள்

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் பெய்த திடீர் மழையின் காரணமாக தமிழகம் முழுவதும் பாதிப்படைந்த மின்சாரத்தை எடுத்து செல்லும் உயரழுத்த கம்பிகளின் பாதைகளிலும் மின் விநியோப் பாதைகளில் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்யும் பணிகள் இரவு பகலாக மேற் கொண்டுள்ளார்கள்.

பாரதத்தில் மேலும் ஊரடங்கு நீடிப்பு அறிவிப்பு வர உள்ளதாக தகவல்கள் வெளியாகும் இந்நிலையில் நோய்தொற்று தீவிரத்தன்மையிலிருந்து உயிரைப்பாதுகாக்க வேண்டுமெனில் மக்களைப்போலவே மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களும் சமூக இடைவெளி மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

தமிழ்நாடு அரசும் மின்சார வாரியமும் உடன் தலையிட்டு மின்சார வாரியத்தில் அதிமுக்கியமான பராமரிப்பு விநியோகம் மற்றும் உற்பத்தி பகுதிகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பொறியாளர்கள் ஆகியோரை தேவையின் அடிப்படையில் குறைந்த அளவு பயன்படுத்த்திடவும் , மேலும் எழுத்துதுறை பணிகளை மேற்கொள்ளும் நிர்வாக, கணக்கு, செயலக மற்றும் தணிக்கைப் பிரிவு பணியாளர்களை இல்லத்திலிருந்தே பணியாற்றும் அளவிலோ அல்லது பொது விடுமுறையோ அளித்திட வேண்டும்.

தலைமை அலுவலகம் உட்பட நிர்வாக அலுவலகங்கள் மற்றும் களப்பணிகளிலும் பெரும்பாண்மையான அளவில் பெண் பணியாளர்கள் அலுவலர்கள் பொறியாளர்கள் பணி யாற்றுவதால் பெண்கள் பணிக்கு வருவதிலிருந்து விலக்கு அளித்து நோய்தொற்றிலிருந்து பாதுகாப்பு அளித்திட வேண்டுகிறோம்.

ஊரடங்கு நேரத்தில் இரவு பகலாக பணியாற்றுபவர்களுக்கும் தொடர்ந்து ஊரடங்கு அமலாக்கம் இருக்கும் வரையில் பணியாற்றுபவர்களுக்கும் கூடுதல் ஊதியம் வழங்க வேண்டும்.

தேவையான அவசர அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வோர் தவிர்த்து ஏனையவர்களுக்கு சிறப்பு விடுப்பு வழங்க வேண்டும்.

இல்லத்திலிருந்து மேற்கொள்ளக் கூடிய பணிகளை இல்லத்திலிருந்து செய்ய அனுமதிக்க வேண்டும்.

மின்சார கணக்கீட்டுப் பணிகளை நிறுத்தி வைத்த உத்தரவை ஊரடங்கு தேதி நீடிக்கும் நாள் வரை நீடித்திட வேண்டும்.

நுகர்வோர்கள் ஏற்கனவே செலுத்தி வருவது போல முந்தைய மாத கட்டணத்தையே செலுத்த அனிமதிக்க வேண்டும்.

அனைத்து அலுவலக வளாகங்களிலும் கிருமி நாசினி தெளித்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழக அரசு உத்தரவுபடி மின்சாரத் தொழிலாளரோ அலுவலரோ பொறியாளரோ கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டால் முழு மருத்துவ செலவையும் மின்சார வாரியம் ஏற்பதுடன் கருணைத் தொகை அரசு அறிவித்த ரூ 2,00,000 /- வழங்கிட வேண்டும்.

மின்விபத்தில் பாதிக்கப்பட்டு திருச்சியில் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவோருக்கு சிறந்த சிகிச்சை அளித்து குணமாக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்
TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
கைபேசி : 9841446621
கட்செவி : 9092268200

## காலியாக உள்ள பணியிடங்களில் ஓய்வு பெற்றவர்களை பணியமர்த்துவதில் ஆட்சேபணை தெரிவித்து வாரியத்திற்குக் கடிதம்

பெறுநர்: நாள் : 17.04.2020

**தலைவர்,**

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள்** : ***சில குறிப்பிட்ட பதவியிடங்கள் காலியாக உள்ளதில் ஓய்வு பெற்றவர்களை பணியமர்த்துதல் - ஆட்சேபணை - தொடர்பாக...***

**பார்வை** : 1. (Per) CUDTANGEDCO Proceedings No. 61 Dated 13th April 2020

2. ***ஊதிய உயர்வு வேலை பகிர்வு ஒப்பந்த நாள் 22.02.2018***

பார்வை (2)ன் படி கடந்த 22.02.2018 ஊதிய உயர்வு மற்றும் வேலை பகிர்வுக்கான முத்தரப்பு ஒப்பந்தம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டு தொடர்ச்சியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்த விரும்புகிறோம்.

பார்வை (1)ன் படி வெளியிடப்பட்டுள்ள வாரிய உத்தரவில் சில குறிப்பிட்ட பதவிகள் காலியாக உள்ளதை ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு தற்காலிகமாக நிரப்பிட அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதை கண்டு, அதிர்ச்சியடைவதோடு இதன் மீதான எங்களது கருத்துகளை தங்களின் மேலான பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

1. 22.02.2018ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள பதவிகளை தற்காலிகமாக ஓய்வு பெற்றவர்களை கொண்டு நிரப்பிட முனைவது மின்சார வாரியம் தொழிற்சங்கங்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை அவமதிப்பதாகும்.
2. ஓய்வு பெற்ற பின் மின்சார வாரியத்தோடு தொடர்பில் இல்லாதவர்கள் இன்றுள்ள பணியை கையாள்வதில் உழைப்பின் பலன் மின்சார வாரியத்திற்கு பெரிதாய் கிட்டாது.
3. சில பல பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்ய இயலாத சூழ்நிலையின் அடிப்படை காரணத்தை தொழிற்சங்கங்களுக்கு தெரிவித்து தொழிற்சங்கங்களோடு கலந்து ஆலோசனை செய்திடல் வேண்டும்.
4. 1947 தொழிற் தாவா சட்டத்தின்படி (ID ACT) ஏற்கனவே உள்ள நடைமுறைகளில் எந்த மாற்றம் கொண்டு வர யோசித்தாலும் 9A நோட்டீஸ் கொடுத்து தொழிற்சங்கங்களின் கருத்தறிய வேண்டுமென்பது நியதி.
5. தற்சமயம் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களை கொரோனா வைரஸ் தொற்று தாக்குவதாக உலக அளவிலான இறப்பு எண்ணிக்கையும், எச்சரிக்கை அறிவிப்பும் உள்ளது.

இந்நிலையில் 58 வயதாகி ஓய்வு பெற்றுள்ளவர்களை மூத்த குடிமக்கள் (Senior Citizen) என்ற அடிப்படையைக் கூட கடைபிடிக்காமல் குறைவான தினக்கூலிக்கு ஆபத்தான பணிக்கும், தொழில்நுட்பம் மற்றும் எழுத்துப் பணிக்கும் நியமிக்க எண்ணுவது இன்று காட்டிய கொரோனா வைரஸ் தொற்று நோயை எதிர்த்திட மத்திய மாநில அரசுகள் எடுத்திடும் போர்க்கால நடவடிக்கைக்கு எதிரானதாக அமையும்.

எனவே, மேற்கண்ட உத்தரவை நடைமுறைப்படுத்தாது நிறுத்தி வைத்திட வேண்டுகிறோம்.

**A. சேக்கிழார்,** பொதுச்செயலாளர்

## Tamilnadu Generation and Distrtibution Corporation
### (SECRETARIAT BRANCH)

**Memo (Per) No. 15282/A22/A222/2020 -1, dated 20.04.2020**

**Sub** : Establishment - TANGEDCO - Dispense the procedure of Annual Inspection Team of Secretariat Branch - Diversion of Officers / Staff in needy places - Temporary working arrangements - Orders - Issued.

**Ref** : Note approved by the Chairman cum Managing Director / TANGEDCO on 30.03.2020

***

While on review of the preliminary inspection conducted by the Secretariat Branch, the Chairman-cum-Managing Director/TANGEDCO has ordered to dispense the procedure of Annual Inspection by the Secretariat Branch.

2. Therefore, the Officers / staff working in the above inspection teams are diverted and the subjects allotted as follows :-

| *Sl. No.* | *Designation* | *Section/Work attached to* |
|---|---|---|
| 1. | Under Secretary /O&M-II | A5 & A20 |
| 2. | Under Secretary/TANTRANSCO | A18 |
| 3. | Assistant Board Secretariat Officer/ TANTRANSCO | A9, A12 & A13 |
| 4. | Section Officer (A24 Sec.) | A18 |
| 5. | Section Officer (A25 Sec) | A5 |

The existing Section Officer/A18 Section / Secretariat Branch shall additionally co-ordinate ERP implementation in Secretariat Branch.

3. Consequent to the work arrangements ordered in para 2 above, the existing post of Under Secretary / Wage Revision and Regulations shall supervise the works of 'A3' & 'A4' Sections / Secretariat Branch and the Under Secretary / Services shall supervise the works of 'A-2' and 'A-15' Sections / Secretariat Branch.

4. This memorandum shall take effect from the date of issue of orders.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**Dr. S. VINEETH**
Secretary (a/c

## நிர்வாகப் பிரிவில் இயங்கி வரும் ஆய்வு குழுவுக்கு மாற்று பணி உத்தரவு

# Tamilnadu Generation and Distrtibution Corporation

**(SECRETARIAT BRANCH)**

**Memo (Per) No. 15282/A22/A222/2020 -2, dated 20.04.2020**

**Sub** : Establishment - TANGEDCO - Dispense the procedure of Annual Inspection Team of Administrative Branch - Diversion of Officers / Staff in needy places - Temporary working arrangements - Orders - Issued.

**Ref** : Note approved by the Chairman cum Managing Director / TANGEDCO on 30.03.2020

***

While on review of the preliminary inspection conducted by the Administrative Branch, the Chairman-cum-Managing Director/TANGEDCO has ordered to dispense the procedure of Annual Inspection by the Administrative Branch.

2. Consequent to the above, the following re-designation of posts in Administrative Branch are ordered as follows :-

| *Sl. No.* | *Designation* | *Section/Work attached to* |
|---|---|---|
| 1. | Personnel Officer/Court Cases | Personnel Officer/ Contract Labour |
| 2. | Personnel Officer/Recruitment | Personnel Officer/ Recruitment - I |
| 3. | Personnel Officer/Inspection Team A | Personnel Officer/ Recruitment - II |
| 4. | Personnel Officer/Inspection Team B | Personnel Officer/Unit (Technical Branch) |
| 5. | Assistant Personnel Officer/Unit-II | Assistant Personnel Officer/Court Cases |

3. Therefore, the Officers working in the above inspection teams are diverted and accommodated in the sections as follows :-

| **Sl.No.** | **Designtation** | **No. of Posts** | **Placed under the control of** |
|---|---|---|---|
| 1. | Inspection Team A Superintendent/ G-49,G-50,G-51 Sections | 3 | Personnel Officer / Recruitment II |
| 2. | Inspection Team B | 1 | Personnel Officer/ Staff sanction |
| | Superintendent/G-52 Section | 1 | Assistant Personnel Officer/Court Cases |
| | Superintendent/G-54 Section | 1 | Assistnat Personnel Officer/ Accounts & Administration Staff |

3. This memorandum shall take effect from the date of issue of orders.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**Dr. S. VINEETH**
Secretary (a/c

**நிர்வாகப்பிரிவு மற்றும் செயலகப்பிரிவில் இயங்கி வந்த ஆய்வுக்குழுமங்களின் பணிகளை நிறுத்தும் உத்தரவு**

## Tamilnadu Generation and Distrtibution Corporation
### (SECRETARIAT BRANCH)

**Memo (Per) No. 15282/A22/A222/2020 -3, dated 20.04.2020**

**Sub** : Establishment - TANGEDCO - Dispense the procedure of Annual Inspection Team of Secretariat Branch and Administrative Branch - Reised Orders - Issued.

**Ref** : Note approved by the Chairman cum Managing Director / TANGEDCO on 30.03.2020

***

White on review of the preliminary inspection teams of Secretariat Branch and Administrative Branch, the Chairman-cum-Managing Director/TANGEDCO has ordered to dispense the procedure of Annual Inspection conducted by the Secretariat Branch and Administrative Branch.

2. Accordingly, it is hereby ordered that the Chief Engineers shall inspect the offices of Superintending Engineers and Executive Engineers under their control periodically and furnish an annual inspection report to the concerned Directors and the Directors shall randomly check the Chief Engineers Office during their visit to the concerned offices.

3. The receipt of this Memorandum shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**Dr. S. VINEETH**
Secretary (a/c

**மின் உபயோகமானதை மின்நுகர்வோர்களே கணக்கீடு செய்து மின்சாரவாரியத்திற்கு தெரியப்படுத்தி பணம் செலுத்த (முந்தைய மாத தொகையை செலுத்தாமல்) உதவிடும் உத்தரவு**

## TAMGEDCO
### (ACCOUNTS BRANCH)

**Memo No. CFC/Rev/FC/Rev/F/EOT/D.249/2020, dated : 21.04.2020**

**Sub** : TANGEDCO - COVID-19 outbreak - Self-Assessment reading for LT/LTCT Industrial & Commercial Consumers only - Bills for the month of April 2020 - Instruction issued - Valid till 03.05.2020 - Reg.

**Ref** :
1. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D201/2020 dated 21.03.2020
2. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.218/2020 dated 23.03.2020
3. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.219/2020 dated 26.03.2020
4. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.225/2020 dated 27.03.2020

5. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.235/2020 dated 13.04.2020
6. CMD's note approval dated 21.04.2020

***

In view of the COVID-19 outbreak, and lock down since 24.03.2020 midnight, considering the difficulties faced by the LT consumers of TANGEDCO, it was informed to adopt previous month billing (PMC billing) for all LT and LTCT services whose bill month is March 2020 / April 2020 and the reading date is from 22.03.2020 to 30.04.2020 (i.e. to adopt the amount billed for January 2020/February 2020/March 2020, as the case may be, as bill amount for March 2020/ April 2020).

2.0) In this connection, several LT/LTCT Industrial and Commercial consumers have represented that as many of such LT/LTCT Industrial and Commercial establishments are not functioning during the lock down period due to COVID-19, PMC Billing [(i.e.) bill raised based on the previous month's amount assessed] is higher as compared to the actual usage.

3.0) In view of the LT/LTCT Industrial and Commercial consumers' representation, it is instructed to accept 'self-assessment' reading as furnished by the LT/LTCT industrial and commercial consumers for the bill month April 2020 instead of PMC billing. Hence, the Superintending Engineer/EDCs are instructed to arrange to accept the **"self-assessment reading"** furnished by the LT/LTCT Industrial and commercial consumers alone :

a) Through SMS/Whatsapp/E-mail Message to the AE/JE's (Section Officer) Mobile Number / E-mail ID in the form of Text or photo image of the Kwhr/Kvahr/MD (as applicable). The respective AE/JE's (Section Officer) Mobile Number/E-mail ID can be obtained by the LT/LTCT Industrial and Commercial consumers from TANGEDCO's website **www.tangedco.gov.in.**

b) Based on the reading furnished by the LT/LTCT industrial and commercial consumers the Section Officer shall raise the bill for April 2020 instead of PMC billing. The bills can be communicated to the respective consumers in the same mode as the readings have been received (SMS/Whatsapp/E-mail Message) by the Section Officer concerned.

c) The LT/LTCT consumers may be advised to make use of the online payment facilities such as Internet Banking, Mobile Banking, Payment Gateway, Bharath Bill Pay System (BBPS) etc., for the payment of current consumption charges and other arrear charges, as a precautionary measure.

d) The above instructions would not apply to other consumer categories, such as LT domestic consumers etc. and are valid till 3.5.2020.

**// By Order of CMD/TANGEDCO//**

Sd/- xxx (21.04.2020)
Chief Financial Controller / Revenue

**ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வாழ்நாள் சான்றிதழ்**
**ஜுன், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் அளித்திட வழிசெய்யும் உத்தரவு**

## Tamilnadu Generation and Distrtibution Corporation

**(ABSTRACT)**

Pension/Family Pension - Furnishing of Life Certificate, Non-employment Certificate and Non-remarriage / Non-marriage Certificate by the Pensioners / Family Pensioners - Modified orders issued by the Government of Tamil Nadu - Adoption in TANGEDCO - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(PER) CMD TANGEDCO PROCEEDINGS NO. 67,** **DATED THE 21st APRIL, 2020**
Chithirai -8, Saarvari Aandu,
Thiruvalluvar Aandu - 2051

**READ :**

1. G.O.Ms. No. 103, Finance (Pension) Department, dated 31.03.2015
2. G.O.Ms. No. 152, Finance (Pension) Department, dated 22.05.2015
3. (Per) CMD TANGEDCO Proceedings No. 188 (SB), dated 26.09.2015
4. Memo. (Per) No. 45359/A18/A183/2017-1 (SB), dated 06.09.2017
5. G.O.Ms. No. 215, Finance (Pension) Department, dated 265.03.2020

****

**PROCEEDINGS :**

Based on the Government Orders first and second read above, orders were issued in the Proceedings thrid read above,that the Penisoners including Family Pensioners / Exgratia beneficiaries shall furnish the Life Certificate, Non-Employement Certificate and Non-remarriage / Non-marriage Certificate at any time during the months of "April, May and June" every year to the Pension Disbursing Officer concerned. It has also been ordered therein that if the Pensioners / Family Pensioners / Exgratia beneficiaries do not furnish / produce the said Certificate on or before 30th June, the Chief Internal Audit Officer shall call for annual mustering of the Pensioners / Family Pensioners / Exgratia beneficiaries during the month of July every year. If the Pensioners / Family Pensioners / Exgratia beneficiaries neither produce the said certificates nor appear for annual mustering, the Chief Internal Audit Officer shall stop the payment of pension / family pension / exgratia with effect from the month of august and the payment of pension / family pension / exgratia will resume only on production of the said certificates or the Pensioners / Family Pensioners appearing in person before the Chief Internal Audit Officer. Subsequently, considering the practical difficulties experienced by the pensioners, orders were issued allowing them to appear in person either before the Chief Internal Audit Officer or respective Regional Deputy Chief Internal Audit Officer for mustering annually - vide Memo. fourth read above.

2. In partial modidifcation of its earlier orders, the Government in G.O. fifty read above, have issued orders that the State Government Pensioners / Family Pensioners, be allowed to give their Life Certificate at any time during the months of "July, August and September" every year for annual mustering instead of "April, May and June" to the Pension Disbursing Officer

concerned. If any pensioner including family pensioner fails to do so, the Pension Disbursing Authority shall call for the personal appearance in October and pension / family pension will be stopped from November onwards for those pensioners including family pensioners who neither appear directly for mustering nor furnish life certificate. The same has been considered for adoption in TANGEDCO.

3. Accordingly, it is hereby ordered that the Pensioners / Family Pensioners be allowed to give their Life Certificate at any time during the months of **"July, August and September" every year** for annual mustering instead of "April, May and June" to the Pension Disbursing Officer concerned. If any pensioner including family pensioner fails to do so, the Pension Disbursing Authority shall call for the personal appearance in **October** and pension/family pension will be stopped from **November** onwards for those pensioners including family pensioners who neither appear directly for mustering nor furnish life certificate. Th epayment of pension/family pension/exgratia will resume only on production of the said certificates or the pensioner appearing in person before the Chief Internal Audit Officer or the respective Regional Deputy Chief Internal Audit Officer.

4. The receipt of these proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**S. VINEETH,**
Secretary (Full Additional Charge)

## கொரோனா தொற்று நோய் நிவாரண நிதிக்கு ஒரு நாள் சம்பளம் பிடித்தம் செய்யும் வாரியத்தின் உத்தரவு

## Tamilnadu Generation and Distrtibution Corporation

**(ABSTRACT)**

TANGEDCO - Secretariat Branch CORONA VIRUS (COVID-19) Pandemic - Contribution of one day Salary / more than one day salary of the employees of TANGEDCO, TANTRANSCO and TNEB Ltd towards the relief and preventive measures being taken by the Government of Tamil Nadu to control the spread of Corona Virus Pandemic - Orders - Regarding.

---

**(SECRETARIAT BRANCH)**

**(PER) CMD TANGEDCO PROCEEDINGS NO. 64, dated 16.04.2020**

Saarvari, Chithirai - 03
Thiruvalluvar Aandu - 2051

**READ :**

**G.O.(Ms). No. 41 (Personnel and Administrative Reforms (K) Department) dated 03.04.2020**

****

**PROCEEDINGS :**

In the G.O. read above order have been issued that the voluntary contributions of one day salary / more than one day salary shall be deducted from the salary bill of the Government Officials / Employees for the month of April / May 2020 towards Relief and preventive measures being taken by the Government of Tamil Nadu to control the spread of Corona Virus Pandemic

(COVID-19), towards the Chief Minister's Public Relief Fund. The TANGEDCO has decided to adopt the above Government Order.

2. All the pay drawing Officers are authorized to recover one day salary / more than one day salary on gross basis from the salary for the month of April / May 2020, by following the procedure to facilitate the contributions made by the employees of TANGEDCO, TANTRANSCO and TNEB Ltd :-

i. Any employee willing to voluntarily contribute One day's salary / more than one day salary to the Chief Minister's Public Relief Fund towards Relief and preventive measures to control the spread of Corona Virus Pandemic (COVID - 19) shall give his/her consent in writing to the concerned Drawing and Disbursing Officers.

ii. The Drawing and Disbursing Officers shall make use of the provisions in the Web Pay roll application for calculating one day's / more than one day's salary in the pay bill for the month of April / May 2020.

iii. Recovery shall be made straight from the Pay Bills. Recoveries may be credited to Account No. 44.442 - Recoveries of contribution to the Relief and preventive measures being taken by the Government of Tamil Nadu to control the spread of Corona Virus Pandemic (COVID-19) and the details of total amount recovered and credited to that account shall be intimated to the Deputy Financial Controller / Funds / Board Office Accounts Branch.

iv. The Deputy Financial Controller / Funds, in turn, shall consolidate the details of recoveries made at the Circles and arrange to draw a cheque for the amount, towards the Relief Fund and to hand it over to the Government. The report in this regard may be sent to Secretary / TANGEDCO.

v. The credit in Circles in Account No. 44.442 - Recoveries of contribution towards Relief and preventive measures being taken by the Government of Tamilnadu to control the spread of Corona Virus Pandemic (COVID - 19)" may be cleared by getting the debit advce to be raised by the Deputy Financial Controller / Funds through cash sections in Chief Financial Controller's Office.

vi. The Cash Section in Chief Financial Controller's office will raise the necessary debit advice after receipt of the details of recoveries made in each circle and adjust against the payments made to the Fund (Account No. 44.442 at Headquarters).

vii. The drawing and disbursing officer shall allow tax exemption to the extent of 100% on the contribution to Chief Minister's Public Relief Fund based on these orders. Employees who have contributed to Chief Minister's Public Relief Fund other than salary deduction may get receipt for such contribution from Chief Minister's Public Relief Fund to avail tax exemption.

viii. Any employee willing to contribute more than one day's salary may also be permitted to do so as per the willingness given following the procedure mentioned under item (i) above. The Drawing and Disbursing Officers shall ensure that the contributions are made purely voluntarily.

3. The receipt of this proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**S. VINEETH**
Secretary (FAC)

# அரசு அறிவிப்பு

செ.கு.எண். 048 நாள் : 22.04.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி**
**அவர்களின் அறிக்கை - நாள் 22.4.2020**

கொரோனா தொற்று நோய் போராட்டத்தில் முன் நின்று பணிபுரியும் அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவத் துறையைச் சார்ந்த பணியாளர்கள், காவல்துறை மற்றும் பிற அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள், எவருக்கேனும் இந்நோய் ஏற்பட்டால் சிகிச்சைக்கான முழு செலவையும் அரசே ஏற்கும் எனவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2 லட்சம் கொடுக்கப்படும் எனவும், எதிர்பாராதவிதமான இறப்பு ஏற்படுமானால் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணமாக 10 லட்சம் ரூபாய் வழங்குவதுடன் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்படும் எனவும் நான் ஏற்கனவே அறிவித்திருந்தேன்.

★ கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் அரும்பணியாற்றி வரும் மருத்துவத் துறை சார்ந்த பணியாளர்கள் எவரேனும் இந்த நோயால் பாதிக்கப்பட்டு, உயிரிழக்க நேரிட்டால் அவர்களுக்கு 50 லட்சம் ரூபாய் காப்பீட்டுத் திட்டம் மூலம் வழங்கப்படும் என மத்திய அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. இந்த போர்க்காலப் பணியில் ஈடுபட்டுள்ள அரசுத் துறைகளான மருத்துவத் துறை, காவல் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து துறை பணியாளர்களும் கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டு நொய்த் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு நான் ஏற்கனவே அறிவித்த 10 லட்சம் ரூபாய்க்குப் பதிலாக 50 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். மேலும், அவர்களது குடும்ப உறுப்பினர் ஒருவருக்குத் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்படும்.

★ இத்தகைய தன்னலமற்ற பணியை முன்னின்று செய்யும் மேற்சொன்ன நபர்கள் தனியார் மற்றும் அரசு துறையிலிருந்து இறப்பை சந்திக்க நேர்ந்தால் அவர்களின் பணிக்கு நன்றிக் கடன் செலுத்துவது அரசின் கடமை என்பதை கருத்தில் கொண்டு உயிரிழந்தவர்களின் உடலை பாதுகாப்புடனும், உரிய மரியாதையுடனும் அடக்கம் செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

★ கொரோனா தொற்று தடுப்பு பணியில் பணியாற்றும் அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் இப்பணியில் ஈடுபட்டுள்ள பிற துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் இப்பணியில் ஈடுபட்டு உயிரிழக்க நேரிடும் தனியார் மற்றும் அரசுப் பணியாளர்களின் பணியை பாராட்டி அவர்களுக்கு உரிய பணியை பாராட்டி அவர்களுக்கு உரிய விருதுகளும், பாராட்டுச் சான்றுகளும் வழங்கப்படும்.

★ தனியார் மருத்துமனைகளில் பணிபுரியும் பணியாளர்களில் எவருக்கேனும் கொரோனா தொற்று ஏற்பட்டால், மருத்துவ துறையின் வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்ப அந்த

மருத்துவப் பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் பரிசோதனை செய்யவும், அந்த மருத்துவமனையின் பிரிவில் முழுமையாக நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதற்குப் பிறகு மீண்டும் அப்பிரிவில் மருத்துவப் பணிகளைத் தொடரவும் அனுமதிக்கப்படும்.

தற்போது நிலவி வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, சென்னை மாநகரத்தில் நோய் தடுப்பு பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தை முற்றிலும் கட்டுப்படுத்தவும், நோய் தொற்று ஏற்பட்டவர்களின் தொடர்புகளை உடனுக்குடன் கண்டறிந்து சோதனைக்கு உள்ளாக்கவும், மாநகர பகுதிகளில் மூச்சிறைப்பு, காய்ச்சல், தொண்டை வலி போன்ற அறிகுறி உள்ளவர்களை உடனுக்குடன் கொரோனா தொற்று பரிசோதனை செய்யவும், இதன் மூலம் சென்னை மாநகரில் தற்போது செய்யப்பட்டு வரும் பரிசோதனைகளை கணிசமாக உயர்த்தவும், அந்த பரிசோதனை முடிவுகள் உடனுக்குடன் பெற்று நடவடிக்கை எடுக்க அறிவிறுத்தி உள்ளேன்.

இதற்காக திரு. கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் திரு. பாஸ்கரன், இ.ஆ.ப., ஆகிய இரண்டு உயர் அலுவலர்கள் சென்னை மாநகரத்திற்கு கூடுதலாக மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

## மாற்றுத் திறனாளிகள் பணிக்கு வருவதிலிருந்து விலக்கு அளிக்கும் உத்தரவு

**Tamilnadu Generation and Distrtibution Corporation**
**(SECRETARIAT BRANCH)**

**Circular Memo No. 15584/A9/A92/2020-5 dated 18.04.2020**

**Sub** : COVID - 19 - Physically Challenged Person - Exempted to attend duty during lockdown period - Orders - Issued - Communicated.

**Ref** :
i. G.O.Ms. No. 2, dated 31.03.2020
ii. Circular Memo No. 15584/A9/A92/2020-3, dated 04.04.2020
iii. G.O. Ms. No. 3, dated 17.04.2020

****

In continuation of the reference Second cited, the orders issued in the reference third cited may be communicated to all officers of TANGEDCO, TANTRANSCO, TNEB LTD. for taking necessary action.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**S. VINEETH**
Secretary (a/c)

## காலிப்பணியிடங்களில் ஓய்வூதியர்களை பணிக்கமர்த்த வெளியிட்ட உத்தரவை நிறுத்தி வைக்க கோரும் கடிதம்

நாள் : 17.04.2020

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள்** : ***சில குறிப்பிட்ட பதவியிடங்கள் காலியாக உள்ளதில் ஓய்வு பெற்றவர்களை பணியமர்த்துதல் - ஆட்சேபணை - தொடர்பாக...***

**பார்வை** : 1. (Per) CUDTANGEDCO Proceedings No. 61 Dated 13th April 2020
2. ***ஊதிய உயர்வு வேலை பகிர்வு ஒப்பந்த நாள் 22.02.2018***

பார்வை (2)ன் படி கடந்த 22.02.2018 ஊதிய உயர்வு மற்றும் வேலை பகிர்வுக்கான முத்தரப்பு ஒப்பந்தம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டு தொடர்ச்சியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்த விரும்புகிறோம்.

பார்வை (1)ன் படி வெளியிடப்பட்டுள்ள வாரிய உத்தரவில் சில குறிப்பிட்ட பதவிகள் காலியாக உள்ளதை ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு தற்காலிகமாக நிரப்பிட அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதை கண்டு, அதிர்ச்சியடைவதோடு இதன் மீதான எங்களது கருத்துகளை தங்களின் மேலான பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

1. 22.02.2018ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள பதவிகளை தற்காலிகமாக ஓய்வு பெற்றவர்களை கொண்டு நிரப்பிட முனைவது மின்சார வாரியம் தொழிற்சங்கங்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை அவமதிப்பதாகும்.
2. ஓய்வு பெற்ற பின் மின்சார வாரியத்தோடு தொடர்பில் இல்லாதவர்கள் இன்றுள்ள பணியை கையாள்வதில் உழைப்பின் பலன் மின்சார வாரியத்திற்கு பெரிதாய் கிட்டாது.
3. சில பல பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்ய இயலாத சூழ்நிலையின் அடிப்படை காரணத்தை தொழிற்சங்கங்களுக்கு தெரிவித்து தொழிற்சங்கங்களோடு கலந்து ஆலோசனை செய்திடல் வேண்டும்.
4. 1947 தொழிற் தாவா சட்டத்தின்படி (ID ACT) ஏற்கனவே உள்ள நடைமுறைகளில் எந்த மாற்றம் கொண்டு வர யோசித்தாலும் 9A நோட்டீஸ் கொடுத்து தொழிற்சங்கங்களின் கருத்தறிய வேண்டுமென்பது நியதி.
5. தற்சமயம் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களை கொரோனா வைரஸ் தொற்று தாக்குவதாக உலக அளவிலான இறப்பு எண்ணிக்கையும், எச்சரிக்கை அறிவிப்பும் உள்ளது.

இந்நிலையில் 58 வயதாகி ஓய்வு பெற்றுள்ளவர்களை மூத்த குடிமக்கள் (Senior Citizen) என்ற அடிப்படையைக் கூட கடைபிடிக்காமல் குறைவான தினக்கூலிக்கு ஆபத்தான பணிக்கும், தொழில்நுட்பம் மற்றும் எழுத்துப் பணிக்கும் நியமிக்க எண்ணுவது இன்று காட்டிய கொரோனா வைரஸ் தொற்று நோயை எதிர்த்திட மத்திய மாநில அரசுகள் எடுத்திடும் போர்க்கால நடவடிக்கைக்கு எதிரானதாக அமையும்.

எனவே, மேற்கண்ட உத்தரவை நடைமுறைப்படுத்தாது நிறுத்தி வைத்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வாழ்நாள் சான்றிதழ் வழங்க அரசாணையை அமலாக்கிட கோரும் கடிதம்

நாள் : 20.04.2020

பெறுநர்:

**செயலாளர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

பொருள் : **GO Ms. No. 215 Dt. 26.03.2020 - மின்சார வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் நீட்டித்து உத்தரவிடல் - வேண்டுதல் தொடர்பாக...**

தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் April, May, June மாதங்களில் Life Certificate வங்கிகளில் அளித்திடும் நடைமுறை ஏற்கனவே உள்ள உத்தரவின்படி உள்ளது.

தற்சமயம் நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையான கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக தமிழக அரசு பார்வையில் கண்டுள்ள அரசாணைப்படி June, July, August மாதங்களில் Life Certificate அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், குடும்ப ஓய்வூதியர்களும் வழங்கும் அளவில் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றிய ஓய்வதியர்களுக்கும், குடும்ப ஓய்வூதியர்களுக்கும் றேமகண்ட அரசாணையை நீட்டித்து உத்தரவு வழங்கிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## உதவி நிர்வாக அலுவலர் பதவி உயர்வு வழங்க கோரும் கடிதம்

நாள் : 20.04.2020

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள்** : உதவி நிர்வாக அலுவலர் (Assistant Administrative Officer) பதவி உயர்வு - தொடர்பாக.

**பார்வை** : **Letter No. 087647/1565/G31/G312/2019 Dated 19.11.2019**

பார்வையில் கண்டுள்ளபடி 65 நிர்வாக மேற்பார்வையாளர்களுக்கு (Administrative Supervisor) உதவி நிர்வாக அலுவலர் (Assistant Administrative Officer) பதவி உயர்வுக்கான தகுதிக் காண் பட்டியல் கோரப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளது.

மேற்கண்ட 65 நிர்வாக மேற்பார்வையாளர்களில் வரிசை எண். 35 திரு. A. உதயசூரியன் குந்தா உற்பத்தி நிலையத்தில் பணியாற்றி பதவி உயர்வு கிடைக்காமலே கடந்த மாதம் 31.03.2020ல் ஓய்வு பெற்றுள்ளார்.

வரிசை எண் (5) திரு. N. குமார் தலைமை பொறியாளர் அலுவலகம் / விழுப்புரம், வரிசை எண். 27, திரு. N. காந்திமகான், பெரம்பலூர் மின் வட்டம் மற்றும் வரிசை எண். 60 திரு. M. வெள்ளையன் திருப்பத்தூர் மின் வட்டம் ஆகிய மூவரும் இம்மாதம் ஓய்வு பெற உள்ளார்கள்.

உரிய நேரத்தில் பதவி உயர்வு வழங்குவதற்கான பணிகள் தாமதமாகிறது. சுமார் 30 ஆண்டுகள் நிர்வாகத்தில் பணியாற்றிபவர்கள் பதவி உயர்வின்றி ஓய்வு பெறுவது வருந்தத்தக்கதாக உள்ளது.

65 பேருக்கான தகுதிக்காண் பட்டியலை வாரிய பதவி உயர்வு குழு (Department Promotion Committee) கூடி முடிவு செய்து பதவி உயர்வு இம்மாதம் April 2020 ல் கிடைக்கும் அளவில் தேதி **(DPC Date)** ஒதுக்கி பதவி உயர்வு அளித்திட ஆவன செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## மின்சார சட்டம் 2003 ஐ மின்சார சட்டம் 2020 ஆக திருத்தம் தொடர்பான கருத்து கேட்டுள்ள மத்திய மின்துறை அமைச்சகத்திற்கு ஆட்சேபணை கடிதம்

23.04.2020

To

**Shri R.K. SINGH**
Honbl'e Minister (I/C)
Power, New & Renewable Energy
Shriram Shakthi Bhawan
Rafi Marg, New Delhi

***SUB : Electricity (Amendment) Bill 2020 - Comments - Reg.***

***REF : Letter No. 42 / 6 / 2011 - R & R ( Vol - VIII) Dt. 17 th April 2020***

With reference to the above cited, we extreemly surprised and wish to convey our strong objection.

The ministry of Power / Government of India has called for the suggestions / views within 21 days on the above mentioned order date regarding Electricity Act 2003 to amend as Electricity Act 2020 , is not fair in the time of COVID 19 lockdown period of our entire nation.

It is extreemly shocked to see such a reference on the subject in this critical situation of the nation

The entire nation as well as the world is in a single goal to eradicate the global virus COVID 19

As Tamil Nadu Electricity Board Employees Federation is one of the leading trade union in TNEB.

We extend our full co operation on the steps taken by the government of state and centre to eradicate COVID 19 and serve the nation by maintaining the uninterrupted power supply during the lockdown period and we would like to give our views and suggestions on proposed Amendments, However like to point out that it is not in the time and divert our attention on the subject.

Hence we request the Honbl'e Minister for Electericity, Government of India may kindly be postponed the process until the epidemic COVID 19 weakens substantially in our country.

Thanking You Sir,

Yours Faithfully

**(A. SEKKIZHAR)**
General Secretary

# செயலகப்பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவில் ஆயுவுக்குழுக்களை மீண்டும் நடைமுறைப்படுத்திட கோரும் கடிதம்

பெறுநர்: நாள் : 23.04.2020

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியம் - ஆய்வுக் குழுக்கள் - செயலகப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு - தொடர்பாக...**

**பார்வை : 1. Memo (Per) No. 15282/A22/A222/2020-1 Dated 20.04.20**
**2. Memo (Per) No. 15282/A22/A222/2020-2 Dated 20.04.20**
**3. Memo (Per) No. 15282/A22/A222/2020-3 Dated 20.04.20**

தமிழ்நாடு மின்சார வாரியம் துவக்கப்பட்ட 1957 முதல் தமிழ்நாடு அரசின் செயலகம் தொடர்புடைய பணிகளை செயல்படுத்திட உருவாக்கப்பட்ட செயலகப் பிரிவில் ஆய்வுக்குழு தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள்.

மேற்கண்ட ஆய்வுக்குழு மண்டல் அளவில் மின்சார வாரியத்தில் நிர்வாக செயல்முறைகள் ஒழுங்காக அமல்படுத்த பணிகள் நடைபெறுகிறதா என்பதையும் தவறான அணுகுமுறைகள் இருப்பின் அவற்றினை சரிப்படுத்துவதற்கும் உரிய வழிமுறைகளை கையாள அறிவுறுத்துவதுடன் வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதுமான பணியினை செய்து வருகிறார்கள்.

இது போலவே நிர்வாகப் பிரிவில் உள்ள ஆய்வுக்குழு அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களிலும் வாரியத்தின் விதிமுறைகள் மீறாமல் கடைப்பிடிக்கப்படுகிறதா என்றும் பணிப் பதிவேடுகள் உள்ள அனைத்தும் பதிவுகளாகி பராமரிக்கப்படுகிறதா என தொழிலாளர்கள் சம்பந்தமான பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

செயலகப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவில் உள்ள ஆய்வுக் குழுக்கள் மண்டல மற்றும் மின்வட்ட அலுவலகங்களுக்கு சென்று நிர்வாகப் பணியாளர்கள் செய்துள்ள பணிகளை ஆய்வு செய்து மேலதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டவும், உரிய நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கும் பணியினை மேற்கொள்வதும் தேவைப்படின் வாரியத்தின் கவனத்திற்கும் கொண்டு வரும் பணியினை செய்து வருகிறார்கள்.

TNEB, TANGEDCO, TANTRANSCO என பிரித்த பின்னரும் தொடர்ந்த இந்த பணிகள் சிறப்பாக செயல்படுவது மட்டுமல்ல பணியாளர்களின் எண்ணிக்கை குறைந்த நிலையிலும் இந்தப் பணிகள் சிறப்பாக நடந்து வந்துள்ள நிலையில் பார்வை (1), (2), (3)ல் கண்டுள்ள குறிப்பாணைகளின்படி மேற்கண்ட பணிகளை பார்த்து வந்தவர்களுக்கு மம்றறுப் பணிக்கான உத்தரவிடப்பட்டுள்ளதுடன் மேற்கண்ட பணிகளை தலைமைப் பொறியாளர்கள் மேற்பார்வை மற்றும் செயற்பொறியாளர் அலுவலகங்களில் ஆய்வு செய்திட வேண்டுமென்றும் ஆய்வறிக்கையினை சம்மந்தப்பட்ட இயக்குநர்களுக்கு அனுப்பிட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

இது குறித்து எமது கருத்துகளை கீழ்க்கண்டவாறு தெரிவிக்க விரும்புகிறோம்.

1. **செயலகப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு ஆய்வு செய்வதை விரும்பாதவர்களின் கருத்தினை உத்தரவாக்குவதில் எவ்வித நியாயமில்லை.**

2. **தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நடைமுறையில் செயல்பாட்டில் உள்ள விதிமுறைகளை மண்டல மற்றும் மின்வட்ட, கோட்ட அலுவலகங்களில் சரியாக நடைமுறைப்படுத்துகிறார்களா என்பதை ஆய்வு செய்திட மின்சார வாரியத்தின் வாரிய விதிமுறைகள், நிலையாணைகள் மற்றும் இதர உத்தரவுகள் முழுமையாக அறிந்தவர்களான செயலகப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு எழுத்துப் பணியாளர்கள்தான் மேற்கண்டவைகளை ஆய்வு செய்ய இயலும்.**
3. **தலைமைப் பொறியாளர் ஆய்வு என்பது வழக்கமான சம்பிரதாயமாகி விடல் கூடாது என்பதுடன் தேவையற்ற கூடுதல் பணிச் சுமையை தலைமைப் பொறியாளருக்கு சுமத்துவதற்கு காரணமாக அமைந்திடல் கூடாது.**
4. **நிர்வாகப் பிரிவிலும் செயலகப் பிரிவிலும் குறைந்த அளவில் உள்ள பதவி உயர்வு வாய்ப்பினையும் தடுத்திட ஏதுவாக அமையும்**
5. **பார்வையில் கண்டுள்ள (1), (2), (3) உத்தரவுகளை நிறுத்தி வைத்திடல் வேண்டும்.**
6. **செயலகப் பிரிவிலும், நிர்வாகப் பிரிவிலும் தொடர்ந்து ஆய்வுக் குழு பணி செய்திட அனுமதித்திட வேண்டும்.**

மேற்கண்ட எங்களின் கருத்துகளின் மீது உரிய கவனம் செலுத்தி மறு உத்தரவிட்டு பார்வை (1), (2), (3)ல் உள்ள குறிப்பாணைகளை ரத்து செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## செயலகப் பிரிவில் சார்பு செயலாளர் பதவி உயர்வு அளிக்க கோரும் கடிதம்

பெறுநர்: நாள் : 24.04.2020

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள் : செயலகப் பிரிவு (Secretariat Branch) - சார்பு செயலாளர் (Under Secretary) - பதவி உயர்வு - தொடர்பாக.**

மின்சார வாரிய செயலகப் பிரிவில் 31.03.2020ல் ஏற்பட்ட சார்பு செயலாளர் பதவியிடம் காலியாகவே உள்ளது.

உரிய தகுதியுடையவர் இருந்தும் நிரப்பப்படாமல் உள்ளது. அடுத்தடுத்த பதவி உயர்வை தடுக்க வழி வகுக்கும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

மிகக் குறைந்த அளவே பதவி உயர்வு உள்ள இப்பிரிவில் பணியாற்றுபவர்களுக்கு கிடைக்கக் கூடிய பதவி உயர்வை உடன் வழங்கிட தகுந்த உத்தரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## சென்னை வடக்கு திட்டத்தில் 2017 ம் ஆண்டு நடைபெற்ற விபத்தில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கான விசாரணையின் இறுதி உத்தரவு வழங்க கோரும் கடிதம்

நாள் : 24.04.2020

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள் : சென்னை மின் பகிர்மான வட்டம் (வடக்கு) - வியாசர்பாடி கோட்டம் - கிருஷ்ணமூர்த்தி நகர் (பிரிவு) - *01.11.2017ல் ஏற்பட்ட மின்விபத்து* - நடவடிக்கை - தொடர்பாக...**

சென்னை மின் பகிர்மான வட்டம் (வடக்கு) வியாசர்பாடி கோட்டம் கிருஷ்ணா நகர் பிரிவில் கடந்த 01.11.2017ல் ஏற்பட்ட மின் விபத்து தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கையில் விசாரணை மேற்கொண்டு தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு கீழ்கண்டவர்கள் மீண்டும் பணியிலமர்த்தப்பட்டு பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

1. **A. இராஜ்குமார்** - உதவி செயற்பொறியாளர்
2. **S. டில்லி** - உதவி பொறியாளர்
3. **P. இராஜேந்திரன்** - சிறப்பு நிலை ஆக்க முகவர்
4. **E. சிட்டிபாபு** - ஆக்க முகவர் முதல் நிலை
5. **P. பலராமன்** - மின்பாதை ஆய்வாளர்
6. **G. ரகு** - மிகைநிலை மின்பாதை ஆய்வாளர்
7. **A. நைனார்** - கள உதவியாளர்
8. **S. நாகேஷ்** - கள உதவியாளர்

மேற்கண்ட விபத்தின் விசாரணை முடிந்து தலைமைப் பொறியாளர் (பகிர்மானம்), சென்னை வடக்கு அவர்களால் வாரியச் செயலாளர் அலுவலகத்திற்கு உரிய மேல் நடவடிக்கைக்காக கோர்ப்பு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது.

மேற்கண்ட 8 பேரில் 1 மற்றும் 2வது நபர் ஓய்வு பெற்றுள்ளார்கள் (ஓய்வுக் காலப் பயன்கள் எதுவும் அளிக்கப்படாமல்). வரிசை எண் 3வது நபர் திரு. P. இராஜேந்திரன், சிறப்பு நில ஆக்க முகவர் எதிர்வரும் 31.05.2020ல் ஓய்வு பெற உள்ளார்.

எனவே, தலைமைப் பொறியாளர் (பகிர்மானம்) சென்னை வடக்கிலிருந்து வந்துள்ள பரிந்துரையை பரிசீலனை செய்து மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து உரிய முறையில் (பணப் பயன்களுடன்) ஓய்வு பெறுவதற்கான உத்தரவிட்டு உதவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்






**கொரோனா பாதிப்பால் ஊரடங்கில் பாதிக்கப்பட்டுள்ள**
**மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு**
**TNEB எம்ப்ளாயீஸ் நிவாரணம் வழங்கிய காட்சிகள்**








Registered with Registrar of News Papers for India RNI No. TNBIL/2018/76375 (R.Dis No. 599/2018)
Postal Registration No. TN/ARD/106/2018-2020, WPP Licence No. : TN/PMG(CCR)/WPP/607/2019-2020
Posted at Egmore RMS (Patrika Channel) Date of Publishing Second week of every month
Posted on 15 - 17th of every month - Posted on 17.04.2020

# கொரோனா பாதிப்பால் ஊரடங்கில் பாதிக்கப்பட்டுள்ள மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு TNEB எம்ப்ளாயீஸ் நிவாரணம் வழங்கிய காட்சிகள்




Printed by D.Babu, Published by A.Sekkizhar on behalf of Tamil Nadu Electricity Board Employees Federation
39/101 Singanna Street, Chintadripet, Chennai 600002
and Printed at Sri Raj Cine Printers No.177/72, Singanna Street, Chintadripet, Chennai 600002.
**Editor : A. SEKKIZHAR**